பக்கங்கள், எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்10 வள்ளுவர் ஆண்டு 2026 புரட்டாதி 30 செவ்வாய்க்கிழமை (17-10-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 328

# வலிகாமம் மேற்கில் நேற்றும் மோதல்

# படையினர் அகோர ஷெல் தாக்கு!

## மாணவன் தலைசிதறி பலி மக்கள் இடம் பெயர்வு!

வலிகாமம் மேற்கு ஒக்ரோபர் 17

வலிகாமம் மேற்கு மாதகல் பகுதியில் இருந்து நேற்று இரண்டாவது நாளாக முன்னேற முயன்ற ஸ்ரீலங்காப் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் மோதல்கள் இடம் பெற்றன.

நேற்றுக் காலை 9 மணி முதல் வலிகாமம் மேற்கு குடியிருப்புப் பகுதிகள் மீது ஸ்ரீலங்காப் படைகள் நடத்திய கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்களினால் பாடசாலை மாணவன் ஒருவன் தலைசிதறிப் பலியானான்; பெருமளவு சொத்துக்கள், உடைமைகள் நாசமாகின; ஆயிரக்கணக்கான மக்கள் நேற்றும் இடம்பெயர்ந்தனர்.

சுழிபுரம் சண்ணை அம்மன் கோயிலடியில் வீடு ஒன்றின் முற்றத்தில் விழுந்து வெடித்த ஷெல்லினாலேயே சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவனான சிவபாதம் கணேஸ் (வயது 15) என்பவர் தலைசிதறி பலியானார்.

ஸ்ரீலங்காப் படையினர் பரவலாக நடத்தியஷெல் தாக்குதல்களை அடுத்து —

(8 ஆம் பக்கம் பார்க்க)

## குடாரப்புவில் குண்டு வீச்சு!

வடமராட்சி, ஒக். 17

வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள குடாரப்புவில் புக்காரா விமானம் ஒன்று நேற்று முற்பகல் 11 45 மணியளவில் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தியது.

இத்தாக்குதலினால் ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரிய வரவில்லை.

இதேவேளை நேற்று முற்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தோப்பூரில் குண்டு வெடிப்பு

கொழும்பு, ஒக் 17

திருகோணமலைக்குத் தெற்கே தோப்பூரில் உள்ள பொலீஸ் காவலரண் ஒன்றுக்கு அருகில் கிளைமோர் குண்டு வெடித்ததில் ஒருவர் கொல்லப்பட்டார். மூன்று பொலிஸார் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர் ஒரு பொதுமகன் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்தது. (ஐ-3)

## மா, பாண் விலைகளை அரசு உயர்த்தியது!

### 3 வாரங்களில் 2 ஆவது தடவை!!

கொழும்பு, ஒக். 17

வெள்ளிக்கிழமை நள்ளிரவு தொடக்கம் மா, பாண் என்பவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டிருப்பதாக அரசு அறிவித்துள்ளது.

அரசின் இந்த அறிவிப்பு நேற்று திங்கட்கிழமையே வெளியிடப்பட்டது.

விலை அதிகரிப்பின்படி ஒரு கிலோ மாவின் புதிய சில்லறை விலை 9 ரூபா 70 சதமாகும்.

பாணின் புதிய விலை 4 ரூபா 25 சதமாகும்.

ப. நோ. கூ. சங்கங்கள் பேக்கரிகளுக்கு ஒரு கிலோ மாவை 9 ரூபா 25 சதத்துக்கு வழங்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர், செப்டம்பர் மாதம் 22 ஆம் திகதியிலிருந்து—

ஒரு கிலோ மாவின் சில்லறை விலை 7 ரூபா

(7 ஆம் பக்கம் பார்க்க)

## மாவுக்கு வழங்கிய நிதி இராணுவச் செலவுக்கு!

கொழும்பு, ஒக். 17

அமெரிக்க அரசு தனது நாட்டிடமிருந்து கொள்வனவு செய்யும் மாவுக்காக ஸ்ரீலங்காவுக்கு பி. எல். 480 நிதி உதவித்திட்டத்தின் கீழ் வழங்கிய நூறு கோடி ரூபா நிதியில் 80 கோடி ரூபாவை இராணுவச் செலவுகளுக்கு பயன்படுத்திவிட்டதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை மின்சார சபை, ஸ்ரீலங்கா ரெலிகொம் போன்ற நிறுவனங்கள் உட்பட நிதி பெறக்கூடிய அனைத்து இடங்களில் இருந்தும் இராணுவச் செலவுகளுக்காக ஸ்ரீலங்கா அரசு கடன் வாங்கிவிட்டது அதன் பின்னரும் அரசாங்கம் இராணுவச் செலவுகளுக்காக எண்ணூறு கோடி ரூபா குறைநிரப்பு பிரேரணையைச் சமர்ப்பிக்க உள்ளது என்றும் —

இத்தொகையுடன் சேர்த்து இவ்வருட யுத்தச் செலவினம் 3 ஆயிரத்து 600 கோடி ரூபாவாக உயரும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ)

## ஒன்பது விமானங்கள், 12 ஹெலிகள் விரைவில் விமானப்படை வாங்கும்!

கொழும்பு, ஒக். 17

விமானப் படைக்கு மேலும் ஒன்பது தாக்குதல் விமானங்களையும், 12 ஹெலிக்கொப்டர்களையும் அரசு விரைவில் கொள்வனவு செய்யவுள்ளதாக "ராவய" பத்திரிகையை மேற்கோள் காட்டி 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது.

இந்த விமானக் கொள்வனவுடன் மேலும் நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய தற்போது ஆயிரத்து 600 கோடி ரூபாவை அரசு ஒதுக்கியுள்ளதாகவும் "ராவய" தெரிவித்துள்ளது.

1982 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் 2 வீதமாக இருந்த பாதுகாப்புச் செலவினம் இவ்வாண்டு 24 சதவீதமாக உயர்ந்துள்ளது.

அடுத்த வருடம் இது 33சதவீதமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும்— "ரசவய" பத்திரிகையை மேற்கோள் காட்டி "புலிகளின் குரல்" மேலும் தெரிவித்தது. (ஐ-8)

## நெல் கொள்வனவு விலை மூடைக்கு ரூ. 100 அதிகரிப்பு

வன்னி விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் நெல்லுக்கு மூடை ஒன்றுக்கு நூறு ரூபா என்ற அடிப்படையில் கூடுதல் விலை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஸ்ரீலங்கா அரசின் பொருளாதாரத் தடையின் கீழ் அமோனியா போன்ற உரவகைகளையும் வடக்கே எடுத்துவர அனுமதி மறுக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

இத்தகைய உரவகைகளைப் பயன்படுத்த முடியாமல் போனதால் கடந்த சிறுபோகத்தில் நெல் சாகுபடி செய்த விவசாயிகளின் விளைச்சல் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இதனால் மூடைக்கான உற்பத்திச் செலவும் அதிகரித்திருக்கின்றது.

இந்த அதிகரிப்பால் விவசாயிகள் பாதிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காகவே அவர்களிடமிருந்து கொள்வனவு செய்யும் நெல்லுக்கு வழங்கும் விலையை மூடை ஒன்றுக்கு அறுநூறு ரூபாவிலிருந்து எழுநூறு ரூபாவாக அதிகரிக்க முடிவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விலை அதிகரிப்பு கடந்த 15 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. (உ)

## நவீன ஆயுதங்கள் பெற ஈ. பி. டி. பிக்கு அனுமதி

### ஜனாதிபதி வழங்கினார்

கொழும்பு ஒக் 17

கொழும்பு நகரில் திடீர்த் தாக்குதல் நடவடிக்கைகளைச் சமாளிப்பதற்கு நவீன ஆயுதங்களையும், வெடிமருந்து வகைகளையும் பெறுவதற்கு ஈ பி.டி.பி அமைப்புக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அனுமதி வழங்கியுள்ளதாக ஈ. பி. டி. பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்,

கடந்த வெள்ளிக்கிழமை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## "ஓசன் கரியர்" கப்பலில் அரிசி எடுத்துவர ஏற்பாடு!

யாழ்ப்பாணம், ஒக். 17

மன்னார்த்தீவுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபடும் "ஓசன் கரியர்" கப்பல் மூலம் ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை பருத்தித்துறைக்கு எடுத்துவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் தங்கியுள்ள யாழ் அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் இத்தகவலை யாழ். செயலகத்துக்கு நேற்று அறிவித்துள்ளார்.

குடாநாட்டில் நிலவும் உணவுத் தட்டுப்பாட்டைக் கருத்தில் கொண்டு இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள அரச அதிபர், இக்கப்பல் எப்போது யாழ்ப்பாணம் வரும் என்ற தகவலை அறிவிக்கவில்லை. (ஐ-3)

## உருக்குலைந்த நிலையில் சடலம்

வடமராட்சி, ஒக். 17

வடமராட்சிகிழக்கு அம்பன் பகுதியிலுள்ள கண்டல்காட்டு சதுப்பு நிலப் பகுதியிலிருந்து உருக்குலைந்த நிலையில் வயோதிபரின் சடலம் ஒன்று மீட்கப்பட்டது.

இச்சடலம் தொடர்பாக நாகர்கோவில் காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ-173)

## சதாம் ஹுசேய்ன் அமோக வெற்றி!

பக்தாத், ஒக். 17

அடுத்த ஏழு ஆண்டுகளுக்கு ஜனாதிபதிப் பதவியில் நீடிக்க ஈராக் அதிபர் சதாம் ஹுசேய்னுக்கு ஈராக்கிய மக்கள் தமது முழு அங்கீகாரத்தை வழங்கியுள்ளனர்.

நேற்று முன்தினம் இது தொடர்பாக நடந்த கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில் 99 6 சதவீத மக்கள் சதாம் ஹுசேய்னுக்கு தமது அமோக ஆதரவைத் தெரிவித்துள்ளனர். (ஐ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதுகாப்பு நிதி சேகரிப்பு

நீராவியடி, கலட்டிப்பகுதிகளில் ஜே - 100, ஜே - 101 கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த, தேசிய பாதுகாப்பு நிதிக்கு ஒப்புதலளித்து இன்று வரை நிதியினை வழங்காத மக்கள் அனைவரும் நாளை புதன் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை சுந்தர்மடம் ஆலடிச் சந்தியில் அமைந்துள்ள தொடர்பகத்தில் தங்களுடைய நிதிப் பங்களிப்பினை நல்குமாறு நல்லூர் பாதுகாப்பு நிதித் தொடர்பகத்தினர் கேட்டுள்ளனர். (ஐ)

## நங்கூரம் ஆண்டு மலர் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக். 17

நங்கூரம் சமூக அறிவியல் ஏட்டின் 3 ஆவது ஆண்டு மலர் வெளியீட்டு விழாவும் பரிசளிப்பு வைபவமும் நாளை புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

வெளியீட்டு விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மாணவர்களின் "பள்ளியெழுந்திடுவீர்" என்ற நாடகம் இடம் பெறஉள்ளது. (ஐ)

## திருமலை பிரிமா இறங்குதுறை ஊடாக கப்பலில்

# வடக்கே ஆயுதங்களை அனுப்பும் அரசின் ரகசிய முயற்சி தோல்வி!

கொழும்பு, ஒக். 17

பல கடற்படைக் கப்பல்களை இழந்துள்ளதால் வடக்கில் உள்ள துருப்புகளுக்கு விநியோகங்களை வழங்குவதில் நெருக்கடிக்களை எதிர்நோக்கியிருக்கும் ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படைகள் —

வடக்கேயுள்ள துருப்புகளுக்கு தேவையான ஆயுத தளபாடங்களை அனுப்பி வைப்பதற்கு கடந்த வாரம் எடுத்த இரகசிய முயற்சி ஒன்று தோல்வியில் முடிவுற்றதாக அறியவருகின்றது.

தளபாடங்களை அனுப்பி வைப்பதற்கான இரகசியத் திட்டம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வாவின் தலைமையில் தொடராக நடைபெற்ற உயர்மட்ட பாதுகாப்பு மாநாட்டில் திட்டப்பட்டதாக அறியவருகின்றது.

இத்திட்டத்தின்படி —

திருகோணமலை சீனக்குடாவில் சிங்கப்பூர் கம்பனியின் கீழ் இயங்கும் பிரிமா மா ஆலையில் ஆழ்கடல் இறங்குதுறையை அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் இரண்டு நாட்களுக்கு சுவீகரிக்கும் உத்தரவை கடந்த புதன்கிழமை இரவு அரசு அந்தக் கம்பனியிடம் கையளித்தது.

அதேசமயம் திருகோணமலைக்கு அருகே தரித்து நின்ற தனியார் கப்பல் கம்பனி ஒன்றுக்குச் சொந்தமான கப்பல் ஒன்றைச் சுவீகரிக்கும் உத்தரவும் அரசினால் அந்தக் கம்பனிக்கு கையளிக்கப்பட்டது.

இதனையடுத்து —

கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு தரை மூலம் கொண்டுவரப்பட்ட — வடபகுதி துருப்பினருக்கான அவசர விநியோகப் பொருள்கள் — பிரிமா இறங்குதுறைக்கு சந்தடியின்றி கொண்டு வரப்பட்டன.

அதேசமயம் சுவீகரிக்கப்பட்ட கப்பலும் இறங்குதுறையுடன் அணைக்கப்பட்டது.

பொருள்களை ஏற்றுவதற்கு முயன்றபோதுதான் இறங்குதுறையில் உள்ள — சம்பந்தப்பட்ட — பாரம்தூக்கி இயங்க முடியாத நிலையில் இருப்பது படை அதிகாரிகளுக்கு தெரிய வந்ததாம்.

இதனையடுத்து அவசர விநியோகப் பொருள்களை கப்பல் மூலம் வடக்கே ஏற்றி அனுப்பும் முயற்சி பிசுபிசுத்துப் போனதாக அறியவருகின்றது.

இந்த இரகசியத் திட்டத்தை, திட்டமிட்டபடி 48 மணித்தியாலங்களுக்குள் செயற்படுத்த முடியாமல் போனதால் இறங்குதுறை மற்றும் கப்பலை சுவீகரிக்கும் உத்தரவை மேலும் சில காலத்துக்கு நீடிக்கும் முயற்சியில் பாதுகாப்பு உயர்பீடம் ஈடுபட்டிருந்ததாகத் தெரியவந்தது.

கொழும்பில் ஸ்ரீலங்கா அரச இராணுவச் செய்திகளுக்கு விதித்துள்ள கடும் தணிக்கைகளுக்கு மத்தியில் அரசின் இந்த முயற்சி பற்றிய தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

பிரிமா இறங்குதுறையை தற்போதுள்ள நெருக்கடி நிலைமையச் சமாளிப்பதற்காக தற்காலிகமாக சில தினங்களுக்கு மட்டுமே அரசு சுவீகரித்து கையேற்றது என பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் சாக்குப்போக்குச் சொன்னாலும் —

முதலீட்டு பாதுகாப்பு உடன்படிக்கையின்கீழ் ஸ்ரீலங்காவில் முதலீடு செய்துள்ள தங்கள் கம்பனிக்கு உடன்பாட்டில் வழங்கப்பட்டுள்ள உறுதியை ஸ்ரீலங்கா அரசு மீறிவிட்டது எனத் தெரிவித்து, இந்தப் பிரச்சினையை விஸ்வரூபம் எடுக்க வைப்பதில் பிரிமா நிறுவனம் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ]

# சுவரேறிப் பாய்ந்து மைதானம் ஒன்றில் பதுங்கியிருந்து தப்பிய ஈ.பி.டி.பி. தலைவர்

தமிழ்க் கட்சிகளுக்குள் அரசாங்கத்துடன் மிக நெருக்கமான கட்சி ஈ.பி.டி.பி.

இதன் உறுப்பினர்கள் வடக்கு, கிழக்கில் ஆயுதப் படையினருடன் இணைந்து போரிடுகின்றனர்.

கடந்த 9ஆம் திகதி ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவின் மாளிகை மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அத்தாக்குதல் பற்றிய கொழும்புப் பத்திரிகைகளின் தொகுப்பு வருமாறு.

9 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா கொழும்பு ஹவ்லொக் வீதியில் உள்ள தனது இரண்டடுக்கு மாளிகையில் இரவு உணவை முடித்துக் கொண்டு படுக்கைக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்.

ஹவ்லொக் வீதியில் றோயல் இன்ஸ்ரிரியூட் அமைந்துள்ள கட்டடத்துக்கு பின்னால் அமைந்துள்ள இந்த மாளிகையில் சம்பவ நேரம் 14 ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் தங்கி இருந்தனர். இவர்கள் எல்லோரிடமும் துப்பாக்கிகள் இருந்தன.

ஈ.பி.டி.பி. தலைவரின் மாளிகை அமைந்துள்ள பகுதி பலத்த பாதுகாப்புக்கள் உள்ள ஒரு கோட்டை போன்றது.

கனமான உருக்கு 'கேட்'டுகள் எவரும் இலகுவில் ஏறிக் குதிக்க முடியாத உயர்ந்த சுவர்கள், அந்த சுவர்களுக்கு மேல் முட் கம்பிகள், பாதுகாப்புக்காக நவீன ஆயுதங்களுடன் ஆட்கள்.

சம்பவதினம் அந்த மாளிகையின் கம்பியூட்டர் அறையில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் சின்னத்துரை நவராஜாவும் பிரதாப்பும் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இரவு 10.10 இருக்கும் ஈ.பி.டி.பியின் மற்றொரு உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் ஓட்டோ சாரதியுமான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த டாஸ் என அழைக்கப்படும் ஐயாப்பிள்ளை மோகனதாஸ் என்பவர் நவராஜாவுக்கு தமது ஓட்டோவில் 'லிப்ட்' கொடுப்பதற்காக, அவரை அழைத்துச் செல்ல கம்பியூட்டர் அறைக்கு வந்தார்.

நவராஜாவுக்கு வேலை முடியாததால் கீழே இறங்கிச் சென்று ஓட்டோவுடன் காத்திருந்தார்.

இரவு 10-14 மணி இருக்கும் பயங்கர வெடிச் சத்தம் ஒன்று கேட்டது. தேவானந்தாவின் வீட்டு பெரிய இரும்புக் 'கேட்' சக்திமிக்க குண்டு ஒன்றினால் தகர்க்கப்பட்டது.

இந்தச் சத்தம் பல மைல்களுக்குக் கேட்டது.

தாக்குதல் நடத்திய குழுவில் நால்வர் மட்டுமே இருந்தனர். தானாக இயங்கும் துப்பாக்கிகளால் சுட்டுக்கொண்டும், கிரனேட்டுகளை வீசிக்கொண்டும் இவர்கள் உள்ளே வந்தனர்.

கம்பியூட்டர் அறையில் கடமையாற்றிய நவராஜாவுக்காக ஓட்டோவுடன் காத்திருந்த டாஸ் அந்த இடத்திலேயே வைத்தே சுட்டுக்கொல்லப்பட்டார்.

தன்னைப் பாதுகாக்கவோ அல்லது தப்பிஓடவோ அவருக்கு அவகாசம் இடைக்கவில்லை.

துப்பாக்கி நபர்கள் சுட்டபடியே வீட்டின் முன் பகுதியை அடைந்தனர்.

கீழ் மாடியில் கடமையில் இருந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் பதில் தாக்குதல் நடத்தினர். அப்போது வீட்டின் பெரும்பாலான பகுதி இருட்டாக இருந்தது.

இருட்டைப் பயன்படுத்தி ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் சிலர் வீட்டின் பின் பக்கம் ஓடித் தப்பினர். இவர்களைப் போன்றே கம்பியூட்டர் அறையில் இருந்த நவராஜாவும் பிரதாப்பும் தப்பி விட்டனர்.

கீழ் மாடியில் காவலுக்கு நின்ற ஈ.பி.டி.பி. உறுப்பினர்களான ரகு என அழைக்கப்படும் வவுனியாவைச் சேர்ந்த பாலன் செல்லக்குமார் —

திருகோணமலையைச் சேர்ந்த அருளரசன் உதயானந்தன் —

முல்லைத்தீவைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை உதயகுமார் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மற்றும் இரு ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் காயங்களுடன் ஒருவாறு தப்பிச்சென்று விட்டனர்.

இந்தச் சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் மேல் மாடியில் இருந்த டக்ளஸ் தேவானந்தா தனது கைத் துப்பாக்கியால் சுட்டு 'லைட்'டை அணைத்து விட்டு படுக்கை அறை ஜன்னலால் ஏறி வீட்டின் பின்புறமாக கீழே இறங்கினார். வீட்டு மதிலால் ஏறி இருட்டுக்குள் மறைந்து விட்டார்.

பலமணி நேரத்துக்குப் பின்பே அவர் பார்க் வீதியில் உள்ள ஈ.பி.டி.பி.யின் தலைமையகத்துக்கு வந்தார்.

இந்த தலைமையகம் டக்ளஸ் தேவானந்தாவின் மாளிகைக்கு சிறிது தூரத்தில் இருக்கிறது.

டக்ளஸ் தேவானந்தா பார்க் வீதியில் உள்ள கோல்ட் மைதானத்தில் பதுங்கி இருந்துவிட்டு நிலைமை சீரடைந்த பின்னர் தலைமையகத்துக்கு வந்திருந்தார்.

துப்பாக்கி நபர்கள் சுமார் 20 நிமிடம் வரை வீட்டைச் சல்லடை போட்டுத் தேடினார்கள்.

டக்ளஸ் தேவானந்தா அங்கு இல்லை என்பதை உறுதி செய்துகொண்ட பின்னர் தமது வெள்ளை நிற நிஸ்ஸான் வானத்தில் அவர்கள் தப்பிச் சென்றனர்.

அவர்கள் ஹவ்லொக் வீதியில் திரும்பும்போது பொலீஸ் கோஷ்டி ஒன்று ஜீப்பில் வந்து கொண்டிருந்தது.

அந்த ஜீப் மீதும் துப்பாக்கி நபர்கள் சுட்டனர். தாக்குதலில் இருந்து தப்புவதற்காக சாரதி பின்பக்கமாக ஜீப்பை வேகமாகச் செலுத்திச் சென்றார். பொலீஸ் ஜீப் தான் புறப்பட்டு வந்த நரஹென்பிட்டிய பொலீஸ் நிலையத்துக்கே திரும்பிச் சென்றுவிட்டது.

தாக்குதல் நடத்திய கோஷ்டியினர் தப்பிச் செல்லும் போது கொழும்பு-ஹோமகம 138 இலக்க தனியார் பஸ் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். பஸ்ஸில் நின்ற ஒருவருக்கும் காயம் ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் நடந்து ஒரு மணித்தியாலம் கழிந்தும் கொழும்பு நகரில் உள்ள பாதுகாப்பு அதிகாரிகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் இருந்தது.

ஒரு மணித்தியாலத்துக்குப் பின்னரே பொலீஸாரும், இராணுவமும் அடங்கிய கோஷ்டி ஒன்று வந்தது.

தாக்குதல் நடத்திய கோஷ்டியினர் மறைந்திருக்கலாம் அல்லது எஞ்சியுள்ள ஈ.பி.டி.பியினர் தவறுதலாகச் சுடலாம் என்ற தயக்கத்துடனேயே அவர்கள் டக்ளஸின் மாளிகைக்குள் நுழைந்தனர். ஆனால் துப்பாக்கி நபர்கள் குறித்த எந்த ஒரு தடயத்தையாவது அவர்களால் பெற முடியவில்லை. (இ)


## கண்ணீர் அஞ்சலி

திருமதி

சரோஜினிதேவி உரோமகேஸ்வரன்

வைத்திய கலாநிதி பூ. உரோமகேஸ்வரன்

(முன்னாள் அதிபர் ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி ஆயுள்வேத மாகாண பணிப்பாளர் சுகாதார மகளிர் விவகார அமைச்சு வடக்கு, கிழக்கு மாகாணம் திருமலை)

அவர்களின் அன்பு மனைவி இறைபதம் எய்திய செய்தியைக் கேட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

டாக்டர் து. கலைலிங்கம்

சென்றல் மெடிக்கல் கிளினிக் - உடுப்பிட்டி

(39042)



## கண்ணீர் அஞ்சலி

திருமதி

சரோஜினிதேவி உரோமகேஸ்வரன்

சுகாதார மகளிர் விவகார அமைச்சின் வடக்கு - கிழக்கு மாகாண ஆயுள்வேத மாகாண பணிப்பாளர்

வைத்திய கலாநிதி பூ. உரோமகேஸ்வரன்

அவர்களின் அன்புத் துணைவியார் இறைபதம் எய்திய செய்திகேட்டு துயரடைந்தோம். அன்னாரின் இழப்பால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம்.

சித்த மருத்துவத் துறை

யாழ். பல்கலைக்கழகம்.

[39044]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே. ஆர். வீடு திரும்பினார்

கொழும்பு, ஒக். 17

இரட்டைச் சளிச்சுரம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தற்போது வீடு திரும்பி உள்ளார். (இ)

# பேரனுடன் குளத்துக்கு சென்ற சிறுமி பலி

தென்மராட்சி, ஒக். 17

குளத்தில் மாடுகளை குளிப்பாட்டச் சென்ற பேரனுடன் போன எட்டு வயதுச் சிறுமி அதே குளத்தில் மூழ்கி மரணமான சம்பவம் கடந்த ஞாயிறு பகல் பளை இத்தாவிலில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் சுவர்ணமுகி (வயது 8) என்னும் சிறுமியே மரணமானவராவார்.

மாடுகளை குளிப்பாட்டிய பின்னர் பார்த்த போது சிறுமியைக் காணவில்லை. குளத்தில் தேடிய போது கைகள் இரண்டும் சேற்றில் அமிழ்ந்த நிலையில் சிறுமி மீட்கப்பட்டார். சிறுமியை பளை ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லும் போது இடைவழியில் மரணமானதாக தெரிவிக்கப்பட்டது. (ஓ-117)

# சந்திரிகாவை கண்டிக்கிறார் ரணில்

கொழும்பு, ஒக். 17

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொது நலவாய நாடாளுமன்ற சங்க (காமன் வெல்த்) மாநாட்டில் அங்குரார்ப்பண உரை நிகழ்த்திய போது ஐ. தே. க அரசாங்கங்களைச் சாடியதை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வன்மையாகக் கண்டித்துள்ளார்.

ஐ. தே. க. நாடாளுமன்றக் குழுவின் சார்பில் வெளியிட்ட அறிக்கையில் அவர், ஜனாதிபதியின் கூற்று தேவையற்றது, உண்மைக்குப் புறம்பானது, ஒரு நாட்டின் தலைவருக்கு ஏற்றது அல்ல என்றும் கூறியுள்ளார். (ஓ-க)

# கண்டித்து அறிக்கை

கொழும்பு, ஒக். 17

ஈ. பி. டி. பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவைக் கொலை நடத்த முயற்சியைக் கண்டித்து புளொட், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஈ. பி. ஆர். எல். எவ். ஆகியன அறிக்கை வெளியிட்டுள்ளன. (உ)

# 100 அடி நீளமான புதிய வகுப்பறை கொட்டகைகள்

தென்மராட்சி, ஒக். 17

தென்மராட்சி கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம், இயற்றாலை அ. த. க. பாடசாலை ஆகியவற்றில் 100 அடி நீளமான புதிய வகுப்பறைக் கொட்டகைகள் தமிழர் புனர்வாழ்வுக் கழக தென்மராட்சிப் பிரிவினரால் அமைக்கப்பட்டுள்ளன.

வரணி இயற்றாலையில் அமைக்கப்பட்டு வரும் ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் குடியேறியுள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் இப்பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்டதையடுத்து ஏற்பட்ட இட நெருக்கடியினால் இப்புதிய கொட்டகைகள் அமைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# அமைச்சரவை மாற்றத்தின் போது மேலும் மூவர் சேர்க்கப்படுவர்

## வெண்தாமரை ஆதரவாளருக்கு பிரதி அமைச்சர் பதவி

கொழும்பு ஒக். 17

தற்போது 23 பேரைக் கொண்டுள்ள அமைச்சரவைக்கு மேலும் மூவர் சேர்த்துக் கொள்ளப்படவிருப்பதாக அரச வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தெரிவித்தது.

அமைச்சரவையைப் பலப்படுத்துவது என்ற பெயரில் மூன்று பிரதி அமைச்சர்கள் அமைச்சர் பதவிக்கு உயர்த்தப்படுவார்கள் என அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டன.

திட்டமிடல், இன விவகாரம், தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, காணி, வனவள பிரதி அமைச்சர் நந்தமித்ர ஏக்க நாயக்க, உள்ளூராட்சி பிரதியமைச்சர் லஷ்மன் கிரியெல்ல ஆகியோரே அடுத்த டிசம்பரில் அமைச்சர்களாக்கப்படுவர் என எதிர் பார்க்கப்படுகிறது.

இந்த மூவரையும் அமைச்சர்களாக்கும்போது தற்போது எம். பி. களாக உள்ளோரில் மூவரை பிரதி அமைச்சர்களாக நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அரசாங்கம் தற்போது ஆரம்பித்துள்ள வெண்தாமரை திட்டத்தை தீவிரமாக ஆதரித்து வருபவர்களான டிவான் பெரேரா, ஜனக தென்னக்கோன், டலஸ் அலஹப்பெரும ஆகியோரே இந்த மூன்று எம். பிக்களும் ஆவர்.

அரசாங்கத்தின் அமைச்சரவை மாற்றம் கடந்த மாதம் இடம்பெறஇருந்தது. அதுதற்போது டிசம்பர் கடைசிவாரத்துக்கு பின்போட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-உ)

# வெடிமருந்தை பக்கத்து வீட்டுக்குள் வீசிய தமிழ் இராணுவ அதிகாரி

## பம்பலப்பிட்டியில சம்பவம்

கொழும்பு, ஒக். 17

தமது வீடு சோதனையிடப்படலாம் என்று அஞ்சிய கப்டன் தரத்தில் உள்ள தமிழ் ராணுவ அதிகாரி ஒருவர் தமது வீட்டில் வைத்திருந்த ஆறு கைக்குண்டுகள், ஏ. கே. 47 ரக துப்பாக்கிக்குப் பயன்படுத்தும் 6 மகஸீன்கள் மற்றும் ஒரு பை நிரம்பிய வெடி மருந்துகளை பெட்டி ஒன்றில் வைத்து பக்கத்து வீட்டுக்குள் எறிந்தாராம்.

இந்தச் சம்பவம் பம்பலப்பிட்டியில் உள்ள லேயார்ட்ஸ் வீதியில் இடம்பெற்றது.

பக்கத்து வீட்டுக்காரர் தமது தோட்டத்தை துப்புரவு செய்த சமயம் இந்த வெடி மருந்துகள் அடங்கிய பெட்டி கண்டு பிடிக்கப்பட்டு பொலீஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது.

பொலீஸ் விசாரணையின்போதே பீதியால் இவற்றை எறிந்ததாக அந்த தமிழ் ராணுவ அதிகாரி தெரிவித்தாராம்.

இவர் மீதான விசாரணை தொடர்ந்து நடைபெறுவதாக சிரேஷ்ட பிரதிப் பொலீஸ் மா அதிபர் எச். எம். ஜி. பி. கொட்டகதெனியா தெரிவித்தார். (இ)

# பாதுகாப்பு நிதிக்குப் பணம் தராத மாணவரை மண்டியிட வைத்த அதிபர்!

## விவகாரம் நாடாளுமன்றத்துக்கு வருகிறது

கொழும்பு, ஒக். 17

பாதுகாப்பு நிதிக்குப் பணம் செலுத்தாத மாணவர்களை அதிபர் ஒருவர் தனது அலுவலகத்தின் முன் மண்டியிட வைத்ததாகக் கூறப்படும் விவகாரம் நாடாளுமன்றத்துக்கு வருகிறது.

அம்பாந்தோட்டை மாவட்ட எம். பி. நிஹால் கலப்பதி கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரனவிடம் இது தொடர்பான கேள்வியைக் கேட்பதற்கு முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்.

ஒக்டோபர் 24ஆம் திகதிக்கான நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில வாய்மூல விடைக்கான வினாக்கள் நிரலில் இடம்பெற்றிருக்கும் அக் கேள்வியின் விவரம் வருமாறு:

நீர்கொழும்பு புனித பீற்றர் வித்தியாலயத்தின் அதிபர், பாதுகாப்பு நிதியத்துக்காக ரூபா 25க்கு மேற்பட்ட ஒரு தொகையை அன்பளிப்புச் செய்யும்படி பணித்திருந்தார் என்பதையும் —

இவ்வாறு நிதி செலுத்தத் தவறியவர்களை அதிபரின் அலுவலகம் முன் மண்டியிட்டு நிற்க வைத்தார் என்பதையும் அமைச்சர் அறிவாரா?

இந்த அநீதியான நிதி அறவிடுதலும், மாணவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனையும் தொடர்பாக எடுக்க இருக்கும் நடவடிக்கை என்ன என்பதையும் இச்சபைக்கு அமைச்சர் தெளிவுபடுத்துவாரா? இன்றேல் ஏன்? (ஓ)

## அரசியல் வட்டாரங்களில் பேச்சு

# சந்திரிகா அரசுடன் அனுரா இணைவாரா?

கொழும்பு, ஒக். 17

அனுரா பண்டாரநாயக்க ஐ. தே. கவை விட்டு விலகி ஜனாதிபதி சந்திரிகாவின் அரசாங்கத்துக்கு ஆதரவு அளிப்பார் என்ற பேச்சு அடிக்கடி கொழும்பு அரசியல் வட்டாரங்களில் அடிபடுகிறது.

ஆனால் அனுரா பண்டாரநாயக்க இன்றைய கட்டத்தில் ஐ. தே. கவில் இருந்து வெளியேற விரும்பவில்லை என்பதை பல தடவைகள் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

அனுரா லண்டனுக்குச் செல்வதற்கு முன் இது சம்பந்தமாக அவருடன் பேச்சுக் கொடுத்த வர்த்தகர் ஒருவரிடம், மரணப்பிடியில் இருக்கும் ஓர் அரசாங்கத்தில் தான் சேர விரும்பவில்லை என்று கூறியுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் சகோதரன் அனுராபண்டாரநாயக்காவை தங்களுடன் இணைத்துக்கொள்ள அறவே விருப்பம் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். (ஓ-க)

# இரத்தினபுரி வெள்ளத்துக்கு 40 லட்சம் ரூபா ஒதுக்கீடு

கொழும்பு, ஒக். 17

இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளத்தினால் ஏற்பட்ட பாதிப்புகளை ஈடுசெய்யவும், இடம்பெயர்ந்தோருக்கு நிவாரணம் வழங்கவும் என சமூகசேவைத் திணைக்களம் உடனடியாக 40 லட்சம் ரூபாவை ஒதுக்கியது.

இரத்தினபுரி மாவட்டத்தில் இரண்டு நாட்கள் பெய்த மழையினால் 20,000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டதாகவும், பயிரழிவு மற்றும் அதிதியாவசிய சேவைகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வெள்ளத்தினால் இடம் பெயர்ந்தவர்கள் தங்குவதற்காக 13 முகாம்கள் நிறுவப்பட்டுள்ளதாக இரத்தினபுரி அரசாங்க அதிபர் குசுமா வெலகொட தெரிவித்தார்.

இவர்களுக்கு நிவாரணம் வழங்க 14 லட்சம் ரூபாவும், பாதிப்புகளுக்காக 26 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் லட்சக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்துள்ள போதிலும் — சமூக சேவைப் பகுதியால் பணம் [illegible] ஒதுக்கப்பட்டது? (அ)

# மெய்யியல் துறை கலாநிதி

யாழ்ப்பாணம், ஒக். 17

உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் செல்வி சி. வி. செல்லையாவுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் மெய்யியல்துறை கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

"கிறிஸ்தவ மதத்தின் வருகைக்கு முன்னரும் பின்னரும் தமிழ்ப் பெண்களின் அந்தஸ்து" என்ற பொருளிலான ஆய்வை அவர் சமர்ப்பித்திருந்தார். (ஓ-க)

# விஸ்தாரம்

அறிவழகனா, வா! வா!

கால ஓட்டத்திலை நீண்ட காலமாக இரண்டு பேரும் சந்திக்க ஏலாமல் போச்சுது. நாங்கள் நினைப்பதுபோலவே கருமங்கள் நடக்குது? காலம் தான் நினைச்சதைத்தானே செய்யும். நாங்கள் அதை ஏற்றுக் கொள்ளவேண்டியது தான்.

கன காலத்துக்குப் பிறகு சந்திச்சது பெரிய மகிழ்ச்சி. எப்பிடி, அப்பா அம்மா எல்லாம் சுகமாய் இருக்கினமோ.

இப்ப, இஞ்சாலப் பக்கம் எங்கே வந்தனீர்?

அடடா, இரவுச் சாப்பாட்டுக்கு பாண் வாங்குகிறதுக்கு மத்தியானம் ஒரு மணிக்கே பேக்கறிக்குப் போக வேண்டியிருக்குது; அப்படியே!

ஓமாம், காலையிலை பாண் வாங்கிறதென்டா விடியிறதுக்கு முன்னரே, மூண்டு நாலு மணிக்குக் கியூவிலை நிற்க வேணுமாம்.

எங்கடை சின்னவன் பெரிய கஷ்டப்பட்டு ஐஞ்சு மணிக்கு எழும்பிப் போய் பாணுக்கு கியூவிலை நின்டவன். ஆறரை மணிக்கு வெறும் பையும் ஆளுமாக திரும்பி வந்தான். இனிமேல் ஒரு நாளும் தான் பாண் கியூவுக்குப் போறதில்லை எண்டு சொல்லிப் போட்டு அவசர அவசரமாகப் வெளிக்கிட்டுப் பள்ளிக்குப் போய் விட்டான்

உந்தக் கண்றாவிச் சம்பவங்கள் இப்ப எல்லா வீடுகளிலையும் தான் நடக்குது. பாணைச் சாப்பிட்டுப் பழகினதாலை உந்தக் கஷ்டம் இப்ப அடிக்கடி வந்து கொண்டிருக்குது!

பாண் சுகமான சாப்பாடு, பிட்டு, இடியப்பம் தோசை, அப்பம் எண்டு மற்ற உணவுகளோடு ஒப்பிடும், போது, செலவும் குறைவெல்லே. விறகுப் பிரச்சினை இல்லை. நேரம் மினக்கெடுகிற பிரச்சனையும் இல்லை.

அது மட்டுமில்லை வாழைப்பழம், சம்பல் ஆக மிஞ்சிப் போனா வெறும் தேத்தண்ணியோடை விஷயத்தை முடிச்சுப்போடலாம்.

ஒரு நேரச் சாப்பாடு சரி அதனாலை தானேசாதாரண காலத்திலேயே எங்கட சனம் பாணுக்கு விழுந்தடிக்கிறது கள்.

இப்ப இராணுவம் ஷெல் அடிக்கிற பிரச்சினையோடை, சனம் மெத்த அடிக்கடி இடம் பெயர்கிறதும் கிரமமாக நடக்குது.

இந்த நேரம் பார்த்து சந்திரிகா அம்மையார் உணவுச் சமான் அனுப்புவதையும் நிப்பாட்டிப் போட்டா, தமிழரைப் பட்டினி போட்டு, உவை தங்கடை போராட்டத்தில உறுதியாக இருக்கினமோ எண்டு சோதினை வைக்கிறாவோ, பின்னை!

உவங்கள் ஆமிக்காரர்களைப் பார்த்தியே! இப்ப ஞாயிற்றுக்கிழமை ஞாயிற்றுக்கிழமையா பார்த்துச் ஷெல் அடிச்சுக் கொண்டு முன்னேறும் முயற்சியை ஆரம்பிக்கினம்.

முந்தநாள் ஞாயிற்றுக்கிழமையும் மாதகல் பக்கத்தாலை முன்னேற முயற்சித்துப் பார்த்தினம். ஷெல் அடியின்ரை அகோரத்திலையும், முன்னேறிப் பாய்தலின் அனுபவத்திலையும் வலிகாமம் மேற்குப் பகுதி மக்கள் கணிசமான அளவிலை அண்டைக்கு இடம் பெயர்ந்தவை.

நவாலி, ஆனைக்கோட்டை வரை நடந்து வந்து கோயில்களிலும் மரங்களுக்கும் கீழேயும் நின்ற சனம் பின்னேரவாக்கிலை பேக்கறியளுக்கு முன்னாலை கியூவிலை சேர்ந்துகொண்டுதுகள். தமிழன்ரை நிலை இந்தளவுக்கு வந்திருக்குது!

ஷெல் அடியும், பாண் கியூவும் அரசாங்கத்தின் திட்டமிட்ட சதி பாரும், தம்பி!

- கொண்டோடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அடகுகடை இரும்புக் கதவு 7½ அடி x 2½ அடி, இரும்பு பெட்டகம் (Iron Safe) சொனி ரேப்றெக்கோடர் (ஸ்பீக்கருடன்) சிறந்தமுறையில் பதனிடப்பட்டது). பிஸ்ரன் பம்ப் முதலியன தொடர்பு: புதிய இல. 608, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

[39030]

### புலமைப்பரிசில்

ஆண்டு - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான அடிப்படைக் கல்வி 1995 முதல் நடைமுறைக்கு வரும். புதிய பரீட்சைத் திட்டத்துக்கு அமைவான வழிகாட்டியும் வினா விடைக் கொத்தும், ஆக்கம்: வி. என். எஸ். உதயசந்திரன் வெளியீடு: பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-2400)

### வணிக புள்ளி விபரவியல்

வணிகப் புள்ளி விபரவியல் க. பொ. த. உயர்தரம் பகுதி I ஆக்கம் ராஜ் எஸ். குகன் B. Sc. செ. ஜெயரங்கன் B. Sc. விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம்.

[சி-2456]

## அடைக்கப்பட்ட போத்தல் கள்ளு விற்பனைக்கு

தெல்லிப்பழை ஒக் 17

கள் உற்பத்தி குறைந்துள்ளதை அடுத்து போத்தலில் அடைக்கப்பட்ட கள் விற்பனைக்கு வந்துள்ளது.

ஒரு போத்தல் கள் 23 ரூபாவாக விற்பனையாகின்றது. (ஒ-68)

## திக்கம் பாதை மிக மோசமான பாதிப்பு

கரணவாய் ஒக். 17

நெல்லியடி—திக்கம் பாதை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பெய்த மழையினால் அவ் வீதி குண்டும், குழியுமாகக் காணப்படுகிறது.

அவ் வீதியில் சைக்கிளில் செல்லும் பிரயாணிகள் மிகவும் கஷ்டத்தின் மத்தியில் தமது பிரயாணத்தை மேற்கொள்கின்றனர். (ஒ-5)

## கள் இறக்கிய தொழிலாளி மயங்கி மரணம்

பனைமரத்திலிருந்து கள்ளை எடுத்துக் கொண்டு இறங்கியவர் மரத்தடியில் மயங்கி வீழ்ந்து விட்டார். அவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும்போது இடைநடுவில் மரணமானார்.

இச்சம்பவம் அண்மையில் கைதடி தெற்கில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த இளையவன் செல்லத்துரை (வயது50) என்பவரே மரணமானவர் ஆவார்.

(ஒ-117)


**D M·I**

233, ஸ்ரான்லி வீதி யாழ்

**96 DAY CLASS**

(பரீட்சை எடுத்தவர்களுக்கு)

கணக்கியல்

பிரிவு II

ஆரம்பம்

இன்று 17-10-95

மதியம் 12 மணி

ஆசிரியர்

**D. SAM**

(39019)


## புலிகளின் அறிக்கையும் தணிக்கை

கொழும்பு, ஒக். 17

கடந்த 13 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் சர்வதேச செயலகம் லண்டனில் வெளியிட்ட பத்திரிகை அறிக்கை ஒன்று ஸ்ரீலங்கா அரசின் தணிக்கைக்கு முழு அளவில் உட்படுத்தப்பட்டிருப்பதாக 'ஐலண்ட்' வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

(இ)

## தென்மராட்சிப் பகுதியில் 10 முகாம்களில் மக்கள்

தென்மராட்சி, ஒக். 17

இடிமுழக்கம் நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பிரிவில் உள்ள பத்து நாளோம்பு நிலையங்களில் ஆயிரத்து 439 குடும்பங்களைச் சேர்ந்த 6ஆயிரத்து75 பேர் தங்கியுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

கைதடி விக்னேஸ்வரா, கைதடி முத்துக்குமாரசாமி ம. வி, நாவற்குழி ம. வி. மட்டுவில் ம. வி., மட்டுவில் மலாசனி வித்தியாலயம், மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம், சாவகச்சேரி மகளிர், டிறிபேர்க் கல்லூரி, மீசாலை விக்னேஸ்வரா, மீசாலை வீரசிங்கம் ம. வி. ஆகிய நலனோம்பு நிலையங்களில் இவர்கள் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கான ஒருவார உலர் உணவு விநியோகத்தினை அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-117)

## பாண் இன்றி கால்நடைகளும் பட்டினி!

பாணுக்கு தட்டுப்பாடு நிலவுவதால், மக்கள் மாத்திரமன்றி கால்நடைகளும் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆடு, மாடுகளுக்கு தவிடு, பிண்ணாக்குடன் பாணும் கலந்தே தற்போது பலரும் வழங்கிவருகின்றனர்.

பாண் இல்லாததால், கால்நடைகளும் பட்டினி நிலையை எதிர்நோக்குவதாக கால்நடை வளர்ப்போர் தெரிவிக்கின்றனர். (ஒ-68)

## அச்சுவேலி ஆஸ்பத்திரி ஊழியர்கள் கோப்பாய்க்கு

"இடி முழக்கம்" இராணுவ நடவடிக்கை காரணமாக மூடப்பட்ட அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையின் ஊழியர்கள் கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றி வருகின்றனர். யாழ் சுகாதார சேவை மாகாண பிரதி பணிப்பாளரின் இடமாற்ற அறிவித்தலை அடுத்து இவர்கள் தற்காலிகமாக கோப்பாய் வைத்தியசாலையில் பணியாற்றி வருகின்றனர். (ஐ-135)

## பிரான்ஸின் அணுப் பரிசோதனை: ருமேனியத் தலைநகரில் 130 நாடுகள் கூடி எதிர்ப்பு

புக்காரெஸ்ட் ஒக். 15

பிரான்ஸ் தொடர்ந்து மேற்கொண்டுவரும் அணுப் பரிசோதனைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ருமேனியத் தலைநகர் புக்காரெஸ்டில் உலக நாடுகள் பலவற்றின் பிரதிநிதிகள் கூடி மாநாடு ஒன்றை நடத்தினர்.

இந்த மாநாட்டில் 130 நாடுகள் கலந்து கொண்டன.

மாநாட்டில் நடைபெற்ற கருத்து வாக்கெடுப்பில் அநேக நாடுகள் பிரான்ஸின் அணுப் பரிசோதனைக்கு எதிராக வாக்களித்தன.

பிரான்ஸும், சீனாவும் அணுப் பரிசோதனைகளைத் தடை செய்யும் சட்டத்தை மதித்து நடக்க வேண்டும் எனவும் அந்த நாடுகள் வலியுறுத்தின. [ஒ-எ]

ஓம் சாயிராம்

## 5ஆம் ஆண்டு நீங்கா நினைவில்



| நெஞ்சம் மலர்வு | நெஞ்சம் நெகிழ்வு |
|---|---|
| 14 – 01 – 1935 | 12 – 10 – 1990 |

### அமரர் சி. மகாலிங்கம்

(மரதன் மகா)

(கணக்காய்வாளர் - காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

**திதி: 17 – 10 – 1995**

வாடா மலர் போல
வாழ வைத்த எங்கள் தெய்வமே!
இல்லத்தின் எழிலான
வாழ்வுக்கு வாழ்வளித்த தந்தையே!!
வருடங்கள் ஐந்தென்ன ஒரு யுகமே ஆனாலும்
உங்கள் நினைவு நெஞ்சில் நிறைந்திருக்கும்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகள்

ஆஸ்பத்திரி முன்பாக,
இணுவில்.

(39036)

## கண்ணீர் அஞ்சலி

அன்பும் பண்பும் பாசமும் நிறைந்த அன்புத் தெய்வத்திற்கு எம் கண்ணீர் அஞ்சலி



### திருமதி கெங்கேஸ்வரி ஆறுமுகநாதன்

| அன்னை மடியில்: | இறைவனடியில்: |
|---|---|
| 19 — 10 — 1926 | 13 — 10 — 1995 |

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கெங்கேஸ்வரி ஆறுமுகநாதன் 13-10-95 இல் காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-10-95 இல் திருகோணமலையில் நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

அன்னார் சிதம்பரப்பிள்ளை ஆறுமுகநாதன் அவர்களின் அன்பு மனைவியும், சிவமலர், சிதம்பரமூர்த்தி, சாந்தாதேவி, லோகநாதன், தேவலிங்கம், சோமலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், கதிர்காமசோதி, சபமினா, ஞானப்பிரகாசம், றதி, சுனித்திரா, உஷாயினி ஆகியோரின் அன்பு மாமியாரும், செந்திக்குமரன், மஞ்சுளா, நீலவண்ணன், செல்வா, செகான், மயூரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்;
பா. ஞானப்பிரகாசம் (மருமகன்)
பருத்தித்துறை.

[39027]




வெலிங்டன் சந்திக்கு அருகில்

**UNIKCO COMPUTER CENTRE**

**COMPUTER** பயிற்சி நெறிகள்

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

- BASIC Language (Including Graphics, Sound & Files)
- PASCAL Language
- dBASE III PLUSE and MS-DOS
- LOTUS 1-2-3 and MS-DOS
- WORD PROCESSING (Word Star Rel - 5.5) and MS-DOS

வார நாள் வகுப்புகள் ஆரம்பம்: 20 - 10 - 1995

வார இறுதி வகுப்புகள் ஆரம்பம்: 21 - 10 - 1995

Equipment Used; ACER, ARC Computers (IBM Compatibles)

கட்டணங்கள் தவணை முறையில்

மேலதிக விபரங்களுக்கு;

37, Clock Tower Road. Jaffna.

[C-2483]


## கண்ணீர் அஞ்சலி

யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை
ஆசிரியை

### திருமதி பொன்னம்மா கிருஷ்ணன்

அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்களின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

[39038]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதிய உணவு உண்டு என்றவர் தற்போது கப்பல் இல்லை என்கிறார்

## செயலாளர் ஜுனைட்டின் 'தட்டு' மாறுகிறது

கொழும்பு, ஒக். 17

யாழ். குடாநாட்டிற்குபோதியளவு உணவுப் பொருள்கள் அனுப்பப்பட்டிருப்பதாக அண்மையில் அறிக்கை விட்டு சர்ச்சைக்குள்ளான புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சின் செயலாளரும், அத்தியாவசிய சேவைகள் நாயகமுமான எம். என். ஜுனைட், இப்போது 'தட்டை' மாறிப் போட்டிருக்கின்றார்!

யாழ்ப்பாணத்துக்கு பொருள்களை அனுப்புவதற்கு கப்பல் ஏதும் இல்லை என்பதால் அங்கு பொருள்களை அனுப்ப முடியாதிருப்பதாகத் தெரிவித்திருக்கின்றார்.

தனியார் கப்பல் கம்பனிகளின் உரிமையாளர்கள் யாழ். குடாநாட்டுக்கு பொருள்களை ஏற்றிச் செல்ல மறுப்பதால் —

தமது அமைச்சின்மீதுசுமத்தப்பட்டுள்ள — அத்தியாவசிய உணவுப் பொருள்களை வடக்கே அனுப்பவேண்டிய — பணியை நிறைவேற்றமுடியாமல் இருப்பதாக அவர் கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்றுக்கு தெரிவித்திருக்கின்றார்.

'யாழ்ப்பாணத்தில் உணவுப் பொருள் தட்டுப்பாட்டுக்காக எல்லோரும் எம்மைக் கண்டனம் செய்கின்றார்கள். ஆனால் ஒருவரும் எங்கள் பிரச்சினைகளைப் புரிந்து கொள்கின்றார்கள் இல்லை'' — என்றார் அவர்.

### இரண்டு கப்பல்கள் மட்டுமே

''தற்போது உணவுப் பொருள்களை அனுப்ப இரண்டு கப்பல்களே எம்மிடம் உள்ளன. ஆயிரம் தொன் பொருள்களை ஏற்றக்கூடிய ''ஓஷன் கரியர்'' என்ற கப்பலும் இரண்டாயிரம் தொன் பொருள்களை ஏற்றக்கூடிய ''லங்கா கல்யாணி'' என்ற கப்பலுமே அவையாகும்''.

''வடக்கே பொருள்களை அனுப்பும் நடவடிக்கையைத் துரிதப்படுத்தும்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எனக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஆனால் கப்பல் பிரச்சினையால் ஜனாதிபதியின் உத்தரவைக்கூட ஏற்று செயற்படுத்த முடியாத நிலையில் நான் உள்ளேன்.

''எனினும் ஒரு கப்பலில் ஆயிரம் தொன் மாவை ஏற்றியுள்ளேன். அது விரைவில் யாழ்ப்பாணம் நோக்கி புறப்பட்டுச் செல்லும்.

''யாழ்ப்பாணத்தில் உணவுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கலாம். ஆனால் குடாநாட்டில் பட்டினி நிலை ஏற்பட்டிருப்பதாக வெளியான சில அறிக்கைகளை நான் மறுக்கின்றேன்.''— இவ்வாறு அவர் மேலும் குறிப்பிட்டதாக ஆங்கில வார இதழ் ஒன்று தெரிவித்தது.

(உ)

# பத்திரிகையாளர்களின் கேள்விக்கு பதில் அளிக்காது ஜுனைட் மழுப்பல்

கொழும்பு, ஒக். 17

''யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு பொருள்கள் அனுப்புவது பற்றி அறிந்து கொள்வதற்கு அரசு சார்புப் பத்திரிகையான 'சண்டே ஒப்சேவர்' கடந்த சனியன்று புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளரும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருமான ஜே. என். ஜுனைட்டுடன் தொடர்பு கொண்டபோது, அது பற்றிய தகவல்களை வெளியிட அவர் மறுத்துவிட்டதாக அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஹபரண, மாஹோ, லங்கா கல்யாணி, ஒஷன் கரியர் ஆகிய நான்கு கப்பல்களும் பொருள்களை ஏற்றிக் கொண்டு யாழ். செல்ல தயாரான நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டதாகவும் —

அதனை ஊர்ஜிதப்படுத்த எம். என். ஜுனைட்டுடன் தொடர்பு கொண்டபோதே அவர் 'மௌனம்' காத்ததாகவும்—

அப்பத்திரிகை மேலும் குறிப்பிட்டது.

''இந்தக் கப்பல்கள் யாழ்ப்பாணத்துக்குப் புறப்பட்டு விட்டனவா? யாழ்ப்பாணத்துக்கு உணவு அனுப்புவது தொடர்பாக தற்போதைய பிந்திய நிலைமை என்ன?''— என்று அவரிடம் கேட்டபோது —

நான் விபரங்களை அரசின் தகவல் திணைக்களத்துக்கு அனுப்புகின்றேன். பாதுகாப்பு அதிகாரிகளால் அவை தணிக்கை செய்யப்பட வேண்டி உள்ளன. உங்களுக்குத் தேவையான விபரங்களை தயவு செய்து தகவல் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளுங்கள்''— என்று ஜுனைட் பதிலளித்தாராம்.

[உ]

# தாக்குதல் நடத்தியது யார் என்பதில் டக்ளஸ் தேவானந்தாவுக்கே குழப்பம்

## 3 ஆவது குழு ஒன்று குறித்தும் சந்தேகம்

தம்மீது தாக்குதல் நடத்தியோர் யார் என்பது குறித்து ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா குழப்பமுற்ற நிலையில் இருப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது.

இத்தாக்குதலுக்கு புலிகளே காரணம் என தான் சந்தேகித்தாலும் தனது சகாக்களும் உறவினர்களும் மூன்றாவது குழு ஒன்றின் சம்பந்தம் இதில் இருப்பதாக சந்தேகிக்கின்றனர் என்று அவர் கூறியுள்ளார்.

''இந்தக் கணத்தில் என்ன கூறுவது என்பது எனக்குத் தெரியவில்லை. நான் குழப்பமடைந்துள்ளேன். எனது உயிருக்கு ஆபத்துள்ளது என்பதை மட்டுமே என்னால் இப்போது கூற முடியும்'' — என்று டக்ளஸ் தேவானந்தா தெரிவித்ததாக ''த சண்டே லீடர்'' குறிப்பிட்டது.

தனக்கு மேலதிக பாதுகாப்பு வழங்கும்படி தான் ஜனாதிபதியை தனிப்பட்ட முறையில் கோரியதாகவும் —

ஆனால் இதுவரை அப் பாதுகாப்பு தனக்கு கிடைக்கவில்லை என்றும் —

டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார் என்று 'த சண்டே லீடர்'' குறிப்பிட்டது.

(உ)

# டக்ளஸ் கொலை முயற்சியை அடுத்து கொழும்பில் பாதுகாப்புத் தீவிரம்

ஈ. பி. டி. பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவின் கொழும்பு இல்லம் தாக்கப்பட்டதை அடுத்து, கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக்கப்பட்டிருக்கின்றன.

கொழும்பு நகரிலும் அதைச் சூழவுள்ள பகுதிகளிலும் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபடும் பொலிஸ் அணிகளின் எண்ணிக்கை ஐந்திலிருந்து பதினைந்தாக உயர்த்தப்பட்டிருப்பதாக சிரேஷ்ட உதவி பொலிஸ் மா அதிபர் ஒருவர் தெரிவித்தார்

ஈ. பி. டி. பி. தலைவரின் இல்லம் மீதான தாக்குதல் தொடர்பாக 57 என்ற தொடரிலக்கத்தில் உள்ள பச்சை நிற ''நிஸான்'' வான் ஒன்றைப் பொலிஸார் தேடி வருவதாகவும்—

இது தொடர்பாக இந்தத் தொடரிலக்கத்தில் உள்ள சுமார் எண்பது வான்களை பொலிஸார் துருவிஆராய்ந்து, விசாரணைகளை நடத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலை நடத்தியோர் மேற்படி தொடரிலக்கம் உடையவாகனம் ஒன்றிலேயே தப்பிச் சென்றதாகக் கூறப்படுகின்றது.

மிகப் பாதுகாப்பு மிக்க தேவானந்தவின் வீட்டை தாக்குதல் நடத்தியோர் எவ்வாறு ஊடறுத்து நுழைந்தனர் என்பதும் —

ஆயுதமில்லாமல் இருந்த பாதுகாப்பு காவலர்கள் மட்டுமே அவர்களின் தாக்குதலுக்கு எப்படி இலக்கானார்கள் என்பதும்—

[illegible] தெரிவிக்கப்பட்டது. (உ)

★ பனம்பழக் களியால் கழுவி

# காயவிட்ட உடுப்புகளை மாடுகள் ருசித்து தின்றன!

கரணவாய், ஒக். 17

சவர்க்காரத்தின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், மக்கள் உடுப்புகளை கழுவ பல புதிய உத்திகளைக் கையாளத் தொடங்கியுள்ளனர்.

பனம் பழக்களியினாலும் மக்கள் தமது உடைகளை கழுவத்தொடங்கியுள்ளனர்.

இவ்வாறு பனம் பழக்களியினால் கழுவி காயவிடப்பட்ட சில உடுப்புக்களை மாடுகள் இழுத்து எடுத்து மணந்து ருசித்துச் சாப்பிட்டு விட்டன.

இச்சம்பவம் அண்மையில் வடமராட்சியில் பொலிகண்டிப்பகுதியில் இடம்பெற்றது. சிவஞானம் என்பவரும் சாரத்தையும் அவரின் மனைவியின் சேலையையுமே மாடுகள் சுவைத்து தின்று தீர்த்தன!

(ஒ-எ)

குடா நாட்டின்

# புனர்வாழ்வு திட்டத்துக்கு ரூ 1 கோடி 36 லட்சமாம்

யாழ். குடாநாட்டில் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கே ஒரு கோடி 35 லட்சம் ரூபா யாழ். அரச அதிபருக்கு வழங்கப்பட்டிருக்கின்றதாம்.

கடந்த வாரம் யாழ். அரச அதிபர் தம்மைச் சந்தித்த போது இந்நிதி வழங்கப்பட்டதாக புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளரும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருமான எம்.என். ஜுனைட் தெரிவித்தார்.

''நெருக்கடிகளுக்கு மத்தியிலும் உணவுப் பொருள்களையும், ஏன் பணத்தைக் கூட நாம் குடாநாட்டுக்கு அனுப்பி வருகின்றோம். யாழ்ப்பாண மக்கள் பட்டினியால் வாடுவதாக ஒருவரும் கூற முடியாது''—இவ்வாறு ஜுனைட் மேலும் கூறியுள்ளார். (உ)

## புலிகளின் குரல் வானொலியில்

17 - 10 - 1995

செவ்வாய் இரவு

- ★ 8-02 — ஊர் சுற்றும் ஒலிவாங்கி
- ★ 8-10 — அறிந்து கொள்ளுங்கள்
- ★ 8-20 — நலந்தானா— கல்லடைதல் பற்றி வைத்திய குறிப்பு
- ★ 8-30 —செய்திகள்
- ★ 8-40 — கருத்துக்களம் — இ. இராஜேஸ்வரன் எழுதிய சிந்தனையும் செயற்பாடும்
- ★ 8-50 — மனமும் மொட்டுக்கள்

18 - 10 - 1995

புதன் காலை

- ★ 7 02 —மாவீரவணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள் தொடர்ந்து நீங்கள் கேட்டவை

## தமிழீழ வானொலியில்

செவ்வாய் மாலை

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5 02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — தமிழிசை
- ★ 5-30 — வனொலி மதியூகம்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02 — என் தெரிவு
- ★ 6-10 — செய்திகள்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 —இவ்வாரம் இவர்

உணவு பொருள்களை அனுப்புங்கள்

# யாழ். மக்களின் உயிரோடு விளையாட வேண்டாம்!

## ஜனாதிபதிக்கு ந. ச. ச. கட்சி கடிதம்

கொழும்பு, ஒக். 17

யாழ். மக்களின் உயிரோடு விளையாடாமல் உணவுப் பொருள்களை உடன் அனுப்பி வைக்குமாறு நவசமசமாஜக் கட்சி ஜனாதிபதிக்கு அவசர கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதிக்கு கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் வி. திருநாவுக்கரசு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ். மக்கள் பட்டினிச் சாவை எதிர் நோக்குவதாக எமக்கு தகவல் கிடைத்துள்ளது. அந்த மக்கள் அரைப் பட்டினி, முழுப்பட்டினி நிலையில் வாழ்க்கையை ஓட்டுகிறார்கள். இதற்கு அரசு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

வடக்கு - கிழக்கு யுத்தம் தமிழர்களுக்கு எதிரானதல்ல என அரசு கூறினாலும், அரசின்செயற்பாடுகள் மக்களுக்கு எதிராகவே உள்ளது.

அங்கு மக்கள் சதாபட்டினியுடனும், மரணபயத்துடனுமே வாழ்கிறார்கள்— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

[ஒ-3]

# தேசிய அரசு அமைக்கும் யோசனை நிராகரிப்பு

கொழும்பு, ஒக். 17

விடுதலைப் புலிகளுடனான யுத்தம் காரணமாக, தற்போது எழுந்துள்ள நெருக்கடி நிலையைச் சமாளிப்பதற்கு தேசிய அரசாங்கம் ஒன்று நிறுவப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அரசாங்கம் முற்றாக நிராகரித்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை போக்குவரத்து, சுற்றாடல், மகளிர் விவகார அமைச்சர் சிறிமானி அத்துலத்முதலி விடுத்திருந்தார்.

இத்தகைய யோசனைக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஆதரவு இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தேசிய அரசாங்கம் அமைக்கும் யோசனையை பரிசீலனை செய்யுமாறும்—

இதனை பரிசீலனை செய்வதற்கு சரியான தருணம் இது என்றும்— ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது அமைச்சர்கள் சிலரும் சமீபத்தில் கேட்டிருந்தனர்.

தேசிய அரசாங்கம் அமைக்கும் யோசனையை ஐக்கிய தேசியக் கட்சி முன்னர் ஆதரித்து வந்தது.

உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் ஐக்கிய தேசியக் கட்சி மீது பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு களிபூச முயல்வதால் தேசிய அரசு அமைக்கும் யோசனைக்கு ஆதரவு அளிக்க முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சி தற்போது தெரிவிக்கிறது.

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சிக்கு இடம்பெயர்ந்த பலர் குடிதண்ணீர் இன்றி அவதி

சாவகச்சேரி, ஒக். 17

"வலிகாமம் கிழக்குப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் "இடிமுழக்க" இராணுவ நடவடிக்கை காரணமாக தமது இருப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்து தென்மராட்சியில் மட்டுவில், சரசாலை கல்வயல் பகுதிகளில் தங்கியுள்ள மக்கள் குடிதண்ணீர் பெறுவதில் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

இப்பகுதிகளில் உள்ள கிணறுகளில் நீர் உவர் நீராக காணப்படுவதால் மக்கள் தண்ணீர்க் குடங்களுடனும், றபர் கான்களுடனும் நன்னீர்க் கிணறுகளை நாடி தூர இடங்களுக்குச் செல்வதை காணக் கூடியதாக உள்ளது.

நன்னீர் கிணறுகளில் அதிக அளவு நீர் வெளியே எடுக்கப்படுவதால் — அவற்றிலும் நீர் வற்றிப் போய் விடுகிறது.

எனினும் பருவமழை பெய்யத் தொடங்கியுள்ளதால் கிணறுகளில் நீர் மட்டம் உயர வாய்ப்பு உண்டு.

(ஐ-31)

# யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கிராம சேவையாளர் பதவி உயர்வில் புறக்கணிப்பு

வலி. மேற்கு, ஒக். 17

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர்கள் அதிசிறப்பு கிராம உத்தியோகத்தர் பதவிக்கான போட்டி பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியாதவாறு புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

10 வருட சேவையுடைய கிராம உத்தியோகத்தர் பதவியில் பூரணமாக்கியவர்களிடமிருந்து அதிசிறப்பு கிராம உத்தியோகத்தர் பதவிக்கான போட்டி பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்களை அனுப்பி வைப்பதற்கான கடைசித் திகதி செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதியாகும். ஆனால் இதற்கான சுற்றறிக்கை யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கோ, பிரதேச செயலர்களுக்கோ இதுவரை கிடைக்கவில்லை. கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு சுற்றறிக்கை கிடைத்து அப்பகுதி கிராம உத்தியோகத்தர்கள் விண்ணப்பித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(ஒ-175)

# மாகாண சபை ஊழியருக்கு வருடாந்த இடமாற்றம்

## ஒக். 30 வரை விண்ணப்பிக்கலாம்

வடக்கு - கிழக்கு மாகாண அரசாங்க சேவையில் உள்ளோருக்கான வருடாந்த இடமாற்றத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அரசாங்கநிர்வாக மாகாண சபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் 19/92 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைய—

1996 ஆம் ஆண்டில் இடமாற்றம் கோரும் மாகாண அரசசேவை உத்தியோகத்தர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

குறிப்பிட்ட நிர்வாக மாவட்டத்தில் நான்கு ஆண்டுகளுக்கு மேல் தொடர்ச்சியாக சேவையாற்றிய ஐம்பது வயதுக்குட்பட்ட சகல உத்தியோகத்தர்களும் இடமாற்றம் கோரி விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் ஆவர்.

இவர்கள் தமது திணைக்கள தலைவர்களூடாக விண்ணப்பங்களை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு வடக்கு-கிழக்கு மாகாண பொது நிர்வாக சேவை பிரதம செயலாளர் திரு. ஜி கிருஷ்ணமூர்த்தி அறிவித்துள்ளார்.

(ஒ-எ-152)

# ஆயிரம் ரூபா முற்பணம்

வலிகாமம் கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற இடிமுழக்கம் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட அச்சுவேலி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கும், அங்கத்தவர்களுக்கும் முற்பணமாக தலா ரூபா ஆயிரம் வீதம் சாவகச்சேரி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க அலுவலகத்தில் வழங்கப்படுவதாக சங்கத் தலைவர் தெரிவித்தார்.

இடம் பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியுள்ள சங்க அங்கத்தவர்களும் பணியாளர்களும் முற்பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பளைக்கு வந்த மக்களுக்கு உலர் உணவு இல்லை!

தென்மராட்சி, ஒக். 17

இடிமுழக்க நடவடிக்கைகளாலும் வடமராட்சிப் பகுதியை நோக்கி நடத்தப்பட்ட ஷெல் வீச்சுக்களாலும் பாதிக்கப்பட்ட வலிகாமம் கிழக்கு, வடமராட்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 76 குடும்பங்கள் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் உள்ள உறவினர் வீடுகளிலும் முகமாலை றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும் தங்கியுள்ளன.

இவர்கள் இப்பிரதேசத்தில் தஞ்சமடைந்தபோது இலங்கை செஞ்சிலுவை சங்க பளைப் பிரிவினரால் மூன்று நாள்களுக்குரிய உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு ஏனைய பிரதேசங்களில் ஒரு வார கால உலர் உணவு வழங்கப்பட்ட போதிலும் இங்கு தங்கியுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்க பளைப் பிரதேச செயலகம் பின்னடிப்பதாகவும்—

பளைப் பிரதேசம் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளதால் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இடம் பெயர்ந்த மக்களுக்கு யாழ். செயலக திட்டமிடல் பிரிவினரே உலர் உணவு வழங்க வேண்டுமென பளைப் பிரதேச செயலகத்தினர் கூறியதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

(ஒ-117)

# தொழிற்சங்கங்களுடன் இணைந்து தயாராகியுள்ள புதிய இலங்கை அதிபர் சேவைத் திட்டம்

தொழிற்சங்கங்களால் இணைந்து தயாரிக்கப்பட்டு கல்வி அமைச்சு அதிகாரிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட புதிய இலங்கை அதிபர்சேவை தொடர்பான விவரங்கள் பின்வருமாறு:

அதிபர் சேவையில் 3 வகுப்புகள் உருவாக்கப்படும் வகுப்பு - 2 இல் இரு தரங்கள் இருக்கும். உருவாக்கப்படும் வகுப்பு, தரம், அவற்றிற்குரிய சம்பளத்திட்டம் பின்வருமாறு:

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1— ரூபா 105,000 - 4X4800- 153,000

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2. தரம் - 1 — ரூபா 80,400 - 7X3000 - 101,400

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2, தரம் - 2 — ரூபா 53,880 - 15X1560 -77,280

இலங்கை அதிபர் சேவை வகுப்பு - 3— ரூபா 48 720 - 7X1200- 4X1560- 63,360

தற்போது அதிபர் சேவையிலுள்ள ஏறக்குறைய 20,000 அதிபர்களும், பின்வரும் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்பட்டு உள்வாங்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புள்ளி வழங்கும் அடிப்படை பின்வருமாறு:

★ அதிபர் தரத்திற்கான புள்ளிகள்:

தரம் - 1 — 5 புள்ளிகள்

தரம் - 2 — 4 புள்ளிகள்

தரம் - 3 — 3 புள்ளிகள்

★ ஆசிரிய சேவைக்கான புள்ளிகள்: முதல் நியமனம் தொடக்கம், 06 - 10 - 1994 ஆம் திகதி வரைக்கான சேவைக்காலம் கணிக்கப்பட்டு ஒவ்வொரு வருடத்திற்கும் ஒரு புள்ளி என்ற அடிப்படையில் வழங்கப்படும்.

★ போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தமைக்கான புள்ளிகள்.

அதிபர்களுக்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்தவர்களுக்கு பின்வரும் அடிப்படையில் புள்ளி வழங்கப்படும்.

தரம் - 1 — 5 புள்ளிகள்

தரம் - 2 — 4 புள்ளிகள்

தரம் - 3 — 3 புள்ளிகள்

கல்வித் தகமைக்கான புள்ளிகள்

பின்வரும் அடிப்படையில் கல்வித் தகைமைக்கானபுள்ளிகள் வழங்கப்படும்;

பயிற்றப்பட்ட ஆசிரியர் சான்றிதழ் - 2 புள்ளிகள்

பட்டதாரிச் சான்றிதழ் — 3 புள்ளிகள்

சிறப்புப்பட்டதாரி / கல்விமாணி சான்றிதழ் — 4 புள்ளிகள்

பட்டப்பின் டிப்புளோமாச் சான்றிதழ் — 1 புள்ளி

தேசிய கல்வி நிறுவகத்தின் 1 வருடத்திற்குக் குறையாத முகாமைப்பயிற்சிச் சான்றிதழ் — 1 புள்ளி

அதிபர் சேவைக்காலத்திற்கான புள்ளிகள் பின்வரும் அடிப்படையில் கணக்கிடப்படும்:

ஒவ்வொரு மூன்று வருடத்திற்கும் ஒவ்வொரு புள்ளி எஞ்சிய மூன்று வருடத்திற்கும் குறைந்த காலத்திற்கு ஒரு புள்ளி

தற்போது அதிபர் சேவையிலுள்ளவர்களுக்கு மேற்படி அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்பட்டு மொத்தப் புள்ளிகள் கணக்கிடப்படும். அதிபர்கள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் பின்வருமாறு உள்வாங்கப்படுவார்கள்.

09 புள்ளிகளுக்குக் குறைந்தவர்கள் — அதிபர் சேவை வகுப்பு - 3

10 - 21 புள்ளிகள் — அதிபர் சேவை வகுப்பு-2 தரம் -2

21 - 29 புள்ளிகள் — அதிபர் சேவை வகுப்பு -2 தரம்-1

30 இற்கு மேல் — அதிபர் சேவை வகுப்பு -1

மேற்படி முறையில் புள்ளிகள் வழங்கப்பட்டு அதிபர் சேவையின் வகுப்புகள் தரங்கள் தீர்மானிக்கப்பட்டபின்னர் அவர்கள் பெறும் புள்ளிகளின் அடிப்படையில் சம்பளபடியேற்றம் கீழேயுள்ள அட்டவணைப்படி 06-10-1994 இல் இருந்து வழங்கப்படும்.

மேற்படி திட்டம் இலங்கை அதிபர் சங்கத்தினாலும், ஆசிரியர் சங்கங்களாலும் இணைந்து தயாரிக்கப்பட்டு, கல்வி உயர் கல்வி அமைச்சு அதிகாரிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசினால் நிறுவப்பட்டிருக்கும் 'சம்பள நிர்ணய மீளாய்வுக் குழுவின்' அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அங்கீகாரம் கிடைத்த பின்னர் திறைசேரியின் அங்கீகாரத்திற்கு இது சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படும்.

எனவே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட மேலும் சில மாதங்கள் செல்லக்கூடும் என தொழிற்சங்கங்கள் எதிர்பார்க்கின்றன.

எனினும் விரைவாக இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென அதிபர் சங்கமும் ஆசிரிய சங்கங்களும் இணைந்து பல்வேறு மட்டங்களிலும் அழுத்தங்களை கொடுத்து வருகின்றன.

## சம்பளப்படி அட்டவணை

| பெற்ற புள்ளி | வருடாந்தச் சம்பளம் | அதிபர் வகுப்பு | தரம் |
|---|---|---|---|
| 01 | 45120 | 3 | |
| 02 | 46320 | 3 | |
| 03 | 47520 | 3 | |
| 04 | 48720 | 3 | |
| 05 | 49920 | 3 | |
| 06 | 51120 | 3 | |
| 07 | 52320 | 3 | |
| 08 | 53520 | 3 | |
| 09 | 54720 | 3 | |
| 10 | 57000 | 2 | 2 |
| 11 | 58560 | 2 | 2 |
| 12 | 60120 | 2 | 2 |
| 13 | 61680 | 2 | 2 |
| 14 | 63240 | 2 | 2 |
| 15 | 64800 | 2 | 2 |
| 16 | 66360 | 2 | 2 |
| 17 | 67920 | 2 | 2 |
| 18 | 69480 | 2 | 2 |
| 19 | 71040 | 2 | 2 |
| 20 | 72600 | 2 | 2 |
| 21 | 74160 | 2 | 2 |
| 22 | 80400 | 2 | 1 |
| 23 | 83400 | 2 | 1 |
| 24 | 86400 | 2 | 1 |
| 25 | 89400 | 2 | 1 |
| 26 | 92400 | 2 | 1 |
| 27 | 95400 | 2 | 1 |
| 28 | 98400 | 2 | 1 |
| 29 | 101400 | 2 | 1 |
| 30 | 105000 | 1 | |
| 31 | 109800 | 1 | |
| 32 | 114600 | 1 | |
| 33 | 119400 | 1 | |
| 34 | 124200 | 1 | |
| 35 | 129000 | 1 | |
| 36 | 133800 | 1 | |
| 37 | 138600 | 1 | |
| 38 | 143400 | 1 | |
| 39 | 148200 | 1 | |
| 40 | 153000 | 1 | |

# ரூ. $1\frac{1}{2}$ கோடி நட்டம்

தென்மராட்சி, ஒக். 17

'இடிமுழக்க' இராணுவ நடவடிக்கைகளால் அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்துக்கு ஒரு கோடி 63 லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

சங்கத்தின் வெல்ல உற்பத்தி நிலையம், மதுசார உற்பத்தி நிலையம் ஆகியவற்றின் உற்பத்திச் சாதன இயந்திரங்கள், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் மதுசார உற்பத்திக்கான கள், அலுவலக தளபாடங்கள், உபகரணங்கள் ஆகியவை இராணுவ நடவடிக்கைகளால் சேதமடைந்துள்ளதால் சங்கத்துக்கு பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

[ஒ-117]

# உபதபாலதிபர் இனிமேல் அரச ஊழியர்

கொழும்பு. ஒக். 17

நாடெங்கும் பணியாற்றும் 3,491 உப தபாலதிபர்களை அரசாங்க சேவையில் சேர்ந்து இலங்கை உப தபாலதிபர்கள் சேவையில் உள்ளடக்குமாறு தபால் மா அதிபர் சுற்றறிக்கையை அனுப்பி வைத்துள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து இது அமுலாகும். மாதாந்தம் 2,450 ரூபா அடிப்படைச் சம்பளத்துடன் வாழ்க்கைச் செலவுப்படியும் சேர்த்து வழங்கப்படும்.

வருடாந்தம் உப தபாலதிபர்களுக்கு 28 நாள் லீவு வழங்கப்படும் விடுமுறையில் நிற்கும் போது பணியாற்றும் பதில் உத்தியோகத்தருக்குரிய கொடுப்பனவைக் குறித்த உப தபாலதிபரே வழங்க வேண்டும்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## போரும் பேச்சும்

அரசாங்கம் போரை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

கொழும்பில் நடைபெற்ற அங்கிலிக்கன் திருச்சபையின் வருடாந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இவ்வாறு கோரப்பட்டுள்ளது.

போரை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு அரசாங்கத்துக்குப் பல தரப்புகளில் இருந்தும் ஏற்கனவே கோரிக்கைகள் விடப்பட்டிருந்தன.

ஆகப் பிந்தி, யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சேர்ந்த கலைஞர்கள், எழுத்தாளர்கள், புலமையாளர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரிலும் இந்தக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டிருந்தது.

ஆனால் சந்திரிகாவையும் அவரது அரசாங்கத்தையும் பொறுத்தளவில் இவை யாவும் செவிடன் காதில் ஊதிய சங்குகள் ஆயிற்று.

விடுதலைப் புலிகளைப் பலவீனப் படுத்துவதற்காகவே போர் நடத்தப்படுகிறது என்று கூறிக் கொண்டு, தமிழ் மக்களில் பெரும் எண்ணிக்கையினரை கொன்று குவிக்க வேண்டும் என்ற வெறி மாறும் வரை, சந்திரிகாவின் காதில் இத்தகைய கோரிக்கைகள் அல்லது வற்புறுத்தல்கள் ஏறும் என்று எதிர்பார்க்க முடியாது!

போரை நிறுத்துங்கள்; பேச்சுவார்த்தையைத் தொடங்குங்கள் என்று கேட்கும் போதெல்லாம் வடக்கில் இராணுவ நடவடிக்கைகள் மேலும் தீவிரப்படுத்தப்படுகின்றன.

அரசியல் தலைவர்களும் — அமைச்சர்களும் — அவ்வாறே பேசி வருகின்றனர். யாழ்ப்பாணக் குடாநாட்டை ஆக்கிரமிப்பது என்பது பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களின் சடலங்கள் மீது, ஒரு பெரும் இரத்த ஆறின் மீது தான் சாத்தியம் என்பது இராணுவத்துக்கும் தெரியும்; அமைச்சர்களுக்கும் தெரியும்.

அவ்வாறிருக்க —

"நேர்மையுடனும்" "அர்ப்பணத்துடனும்" ஜனாதிபதியால் விடுக்கப்பட்ட அறிக்கையில் —

சமாதானத்தை சமாதான வழிகளில் அடைய முடியாவிட்டால், வேறு எந்த மார்க்கத்திலாவது சமாதானத்தை அடைவதற்கு எமது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்பதனை நான் தெட்டத் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். எமது போராட்டம் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக நடத்தப்படும் ஒன்றாகும் — என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

போரின் மூலம் சமாதானம் என்பது மயானத்தில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு ஒப்பானதாகும்.

போரின் மூலம் சமாதானம் என்பது சமாதானத்தைக் காண்பதற்கு விசுவாசமாக விரும்பவில்லை என்பதன் மறு வாசகமே.

ஆகையால் எவர் மகஜர் அனுப்பினாலும், பெரிய அழுத்தம் ஒன்று இல்லாமல் சந்திரிகா இராணுவத் தீர்வு என்ற நிலையிலிருந்து நகர மாட்டார்.

அத்தகைய ஓர் அழுத்தத்தை இன்றைய சூழலில் சர்வதேச சமூகத்தினாலேயே போட முடியும் அல்லது சந்திரிகாவின் இராணுவத் திமிரை விடுதலைப் புலிகள் அடக்க வேண்டும்.

# சாவகச்சேரி கோட்ட பாடசாலைகள் நாளை முதல் வழமைபோல் இயங்கும்

யாழ்ப்பாணம், ஒக். 17

சாவகச்சேரி கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகள் நாளை புதன்கிழமை முதல் வழமைபோல் இயங்கவுள்ளன.

இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள பாடசாலைகளை வேறு பாடசாலைகளில் மாலை நேரத்தில் இயங்க வைக்க விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதன்படி —

மட்டுவில் சந்திரபுர ஸ்ரீ சந்திரோதய மகாவித்தியாலயத்தின் ஆண்டு ஒன்று முதல் 5வரையான வகுப்புகள் மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலையிலும் —

ஆண்டு 6 முதல் 13 வரையான வகுப்புகள் மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்திலும் பிற்பகல் ஒரு மணி முதல் 5 30மணிவரை மாலை நேரப் பாடசாலையாக இயங்கும்.

இதேபோன்று —

மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தின் ஆண்டு ஒன்று முதல் ஆண்டு 5 வரையான வகுப்புகள் சரசாலை அ.த.க. பாடசாலையிலும் —

ஆண்டு 6 முதல் 11 வரையான வகுப்புகள் சரசாலை சரஸ்வதி வித்தியாலயத்திலும் பிற்பகல் ஒரு மணிமுதல் 5-30 மணி வரையும் மாலை நேரப் பாடசாலையாக இயங்கும்.

இடம்பெயர்ந்துள்ள மக்கள் தங்கியுள்ள பாடசாலைகளை மாலை வேளையில் இயங்க வைக்க வசதியாக —

மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம், சரசாலை அ.த.க. பாடசாலை, சரசாலை சரஸ்வதி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் நாளை தொடக்கம் காலை 8மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் ஒரு மணி வரையுமே நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை —

சாவகச்சேரி கோட்டத்தைச்சேர்ந்த பின்வரும் பாடசாலைகள் நாளை முதல் அதே இடங்களில் வழமை போல் இயங்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. அவை வருமாறு:—

கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயம், கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம், சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயம், சாவகச்சேரி றிபேக் கல்லூரி, நாவற்குழி மகாவித்தியாலயம், மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம்.

மேற்குறிப்பிட்ட பாடசாலைகளின் ஆசிரியர்கள் உரிய நேரத்தில் பாடசாலைகளுக்கு சமுகமளித்து அதிபர்களுடன் இணைந்து கற்றல், கற்பித்தல் தொடர்பான ஒழுங்குகளைச் செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. (ஐ)

## பாடசாலை இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 17

தொட்டிபாலடி, உடுவிலில் தற்பொழுது இயங்கி வரும் பன்னாலை சேர் கனகசபை அ.த.க. பாடசாலை, நாளை புதன்கிழமை தொடக்கம் இணுவில் காரைக்கால் சிவன் கோயிலுக்கு அருகில் இயங்கவுள்ளது.

மாணவர், பெற்றோர், பாடசாலை நலன்விரும்பிகள் அனைவரையும் அன்றைய தினம் அங்கு சமுகமளிக்குமாறு அதிபர் கோரியுள்ளார். (ஐ)

# சாரமும், சேட்டும் அணிந்து சைக்கிளில் சிப்பாய்கள்!

## புத்தூரில் தப்பி வந்தவர் தகவல்

தென்மராட்சி, ஒக். 17

புத்தூர் பகுதியில் உள்ள இராணுவத்தினர் சாரமும், சேட்டும் அணிந்து சைக்கிள்களில் அப்பகுதியில் சுற்றித் திரிகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பொருள்களை எடுத்து வருவதற்காகச் செல்வோரை இவ்வாறு சைக்கிளில் திரியும் படையினர் சுற்றிவளைத்து கைது செய்கின்றனராம்.

கடந்த சனியன்று பொருள்களை எடுத்து வருவதற்காகச்சென்ற இளைஞர் ஒருவரை சைக்கிளில் பொருள்களைக் கட்டிக்கொண்டு சிவில் உடையில் வந்த படையினர் சுற்றிவளைக்க முற்பட்டவேளை அவர் அவர்களின் பிடியில் இருந்து ஒருவாறு தப்பி வந்து சேர்ந்துள்ளார். [ஐ-117]

# சந்திரிகாவின் பாதுகாப்புக்கு அமெரிக்க நிபுணர்குழுவின் உதவி!

## அரசு கோருகிறது

கொழும்பு, ஒக். 17

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் ஏனைய அரசுத் தலைவர்களையும் பாதுகாப்பதற்கு —

அமெரிக்காவின் மிக முக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பிரிவின் நிபுணத்துவ உதவியை ஸ்ரீலங்கா அரசு கோரியிருக்கின்றது.

அமெரிக்காவின் இரகசிய சேவையின் மிக முக்கிய பிரமுகர்கள் பாதுகாப்புப் பிரிவின் நிபுணத்துவ உதவி, 1993 இல் ஜனாதிபதி பிரேமதாஸா கொலைப்பட்ட கையோடு பதவியேற்ற ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் வழங்கப்பட்டது.

இந்த உதவித் திட்டத்தின் கீழ் ஸ்ரீலங்காவின் பொலிஸ் அதிகாரிகள் பலருக்கு வாஷிங்டனில் பயிற்சிகள் வழங்கப்பட்டன ஆனால் கடந்த வருடம் ஆகஸ்டில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்த கையோடு அது நிறுத்தப்பட்டது. [உ]

## இணுவிலில் நிதி சேகரிப்பு

இணுவில் தென்மேற்கு ஜே — 188, இணுவில் கிழக்கு ஜே — 189, இணுவில் வடகிழக்கு ஜே — 190, இணுவில் மேற்கு ஜே — 191, ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களிடமிருந்து நாளை புதன்கிழமை பாதுகாப்பு நிதி சேகரிக்கப்படவுள்ளது.

இப் பகுதிகளைச் சேர்ந்தோர் பிற்பகல் 3 மணி முதல் 5 மணிவரை இணுவில் மத்திய கல்லூரியில் நிதி செலுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

## வண்ணை, கொக்குவிலில் நாளை நிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 17

தேசிய பாதுகாப்பு நிதிக்கு ஒப்புதலளித்து இன்று வரை நிதியினை வழங்காத கொக்குவில் ஜே — 121, ஜே — 122, ஜே — 123, ஜே — 124, ஜே — 125, ஜே — 126, ஜே — 127, ஜே — 128, கிராம சேவகர் பிரிவுகளிலும் வண்ணார்பண்ணை ஜே —97 ஜே — 98, ஜே — 99 கிராம சேவகர் பிரிவுகளிலும் வசிக்கின்ற நிரந்தர மற்றும் இடம் பெயர்ந்த குடியிருப்பாளர்கள் அனைவரும் நாளை புதன் கிழமை காலை 9-30 மணி முதல் மாலை 3-30 மணிவரை கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியில் அமைந்துள்ள பாதுகாப்பு நிதித் தொடர்பகத்தில் தங்களுடைய நிதியினை செலுத்துமாறு நல்லூர் பாதுகாப்பு நிதித் தொடர்பகத்தினர் அறிவித்துள்ளனர். [ஐ]

## மா, பாண்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

90 சதத்திலிருந்து 8 35 சதமாகவும் —

பாணின் விலை 3 ரூபா 50 சதத்திலிருந்து 3 ரூபா 80 சதமாகவும் உயர்த்தப்பட்டிருந்தது.

மா, பாண் விலைகள் மூன்று வார காலத்தில் இரண்டு தடவைகள் உயர்த்தப்பட்டுள்ளன.

விவசாயிகளின் கோரிக்கையை ஏற்றே அரசாங்கம் மாவின் விலையை அதிகரித்திருப்பதாக வர்த்தக, வாணிப, மற்றும் உணவு அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரமரத்தின தெரிவித்தார். [ஐ-3]

## சத்திர சிகிச்சை நிபுணரின் இடமாற்றத்தை ரத்து செய்விப்பதற்கு முயற்சி

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ். போதனா வைத்திய சாலையில் சத்திர சிகிச்சை நிபுணராகப் பணியாற்றும் டாக்டர் எம். கணேசரத்தினத்தின் இடமாற்றத்தை ரத்துச் செய்விப்பதற்கான முயற்சிகள் கொழும்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

டாக்டர் கணேசரத்தினத்தின் இடமாற்றத்தால் உண்டாகக் கூடிய விளைவுகளை, இப்போது கொழும்பில் தங்கியுள்ள யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர், டாக்டர் செல்வி கே. நவமலர் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் நடத்திய பேச்சுக்களின் போது எடுத்துரைத்தார் என்றும் —

டாக்டர்கணேசரத்தினத்தின் இடமாற்றத்தை ரத்துச் செய்வது குறித்து சாதகமான பதில் கிடைத்ததாகவும் — நேற்று யாழ். ஆஸ்பத்திரிக்குத் தகவல் கிடைத்தது.

யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் கொழும்பிலிருந்து திரும்பிய பின் இவ்விடயம் தொடர்பான முடிவு உறுதியாகத் தெரிய வரும் என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் கணேசரத்தினம் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாக கடந்த வாரம் கொழும்பில் இருந்து தகவல் கிடைத்தது. (அ-4-15-13)

## தபால் ஊழியர் இன்று வேலை நிறுத்தம்

கொழும்பு, ஒக். 17

தபால் மா அதிபர் சோமா கொட்டகொடவை பதவி நீக்கக் கோரி தபால், தொலை தொடர்பு அதிகாரிகள் சங்கம் இன்று வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளது. இச்சங்கத்தில் 24 ஆயிரம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர். [உ]

## தொலைக் கல்வி மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஒக். 17

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இயங்கும் தொலைக்கல்வி நிலையத்தில் பயிற்சிபெற்று-பகுதி இரண்டு பரீட்சைக்கு தோற்றிய சகல ஆசிரிய மாணவர்களையும் எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 3 00 மணிக்கு நிலையத்தில் சமுகமளிக்குமாறு சிரேஷ்ட போதனாசிரியர் அறிவித்துள்ளார். [ஐ]

## விண்கற்கள் பூமி மீது விழும்

யாழ்ப்பாணம், ஒக். 17

நேற்று முதல் எதிர்வரும் 25 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பூமி மீது விண்கற்கள் விழும் என்று வானியல் நிபுணர்கள் கூறியுள்ளனர்.

எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 4 மணிக்கும் 5 மணிக்கும் இடையில் அதிகளவில் விண்கற்கள் பூமியில் விழும்.

தமிழீழப் பகுதிகளிலும் விண்கற்கள் விழும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3]

# யாழ். பிரஜைகள் குழுவின் மகஜர் ஜெனிவா சேர்ந்தது

யாழ்ப்பாணம், ஒக். 17

தமிழ் மக்களின் அவலங்களை நீக்க ஐ.நா தலையிட வேண்டும் என்ற யாழ். பிரஜைகள் குழுவின் கோரிக்கை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் ஜெனிவா தலைமையகத்துக்கு அறிவிக்கப்பட்டு விட்டது.

தமிழ் மக்களின் அவலங்களை நீக்க உடனடியாக ஐ நா. செயலாளர் நாயகம் தமது பதவியைப் பாவித்து ஸ்ரீலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று யாழ் பிரஜைகள் குழு திரு. பூட்ரஸ், பூட்ரஸ் காலிக்கு அனுப்பிய மகஜரில் கோரியிருந்தது.

இந்த மகஜரின் பிரதி அகதிகளுக்கான ஐ. நா. தூதரக யாழ் அலுவலகத்திலும் கையளிக்கப்பட்டிருந்தது.

கொழும்பு அலுவலகம் ஊடாக இந்த மகஜர் ஜெனிவாவில் உள்ள தலைமையகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரியவந்தது. (அ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை மாவட்டத்திலும் உணவுத் தட்டுப்பாடு!

## அரச அதிபர் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 17

முல்லைத்தீவு மாவட்டத்திலும் பெரும் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாக முல்லைத்தீவு அரச அதிபர் திரு. கே. தர்மகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இருந்து வவுனியா ஊடாக உணவுப் பொருள்கள் எடுத்து வருவதில் உள்ள தாமதங்களால் அங்கு உணவுத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கொழும்பில் இது தொடர்பாக அதிகாரிகளுடன் அவர் பேச்சுக்களை நடத்தி வருகிறார்.

இதே வேளை — இன்னும் ஓரிரு தினங்களில் 30 லொறிகளில் ரி. டி. எம். உரம் முல்லைத்தீவுக்கு எடுத்துச் செல்லப்படவிருப்பதாக அவர் தெரிவித்தார். (ஐ-3)

## அன்ரனோவை மீட்கும் முயற்சி கைவிடப்பட்டது!

கொழும்பு, ஒக். 17

கடந்த மாதம் 75 படை வீரர்களுடன் கடலில் வீழ்ந்த "அன்ரனோவ்" விமானத்தை வெளியே மீட்டு எடுக்கும் நோக்கம் அரசாங்கத்துக்கு இப்போது இல்லை என்று உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

"மாஸ்ரர் டைவேர்ஸ்" நிறுவனத்தின் உதவியுடன் விமானம் விழுந்த இடம் கண்டறியப்பட்டது.

அதனைத் தொடர்ந்து உருக்கு வலை ஒன்றைக் கடலுக்குள் போட்டு நொறுங்கிய விமானத்தை வெளியே எடுக்க உத்தேசிக்கப்பட்டிருந்தது.

ஆனால் அந்தத் திட்டம் இப்போது கைவிடப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்படுகிறது. [அ]

## சஞ்சேய் தத்துக்கு பிணை!

1993 மார்ச் மாதம் இடம்பெற்ற பம்பாய் குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக தடா சட்டத்தின்கீழ் கைதாகி கடந்த 15 மாதங்களாகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த பிரபல இந்தி நடிகர் சஞ்சேய் தத்தை பிணையில் விடுதலை செய்ய உயர் நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

மூன்று நீதியரசர்கள் அடங்கிய நீதிமன்ற பெஞ் இந்த உத்தரவை வழங்கியது.

5 லட்சம் ரூபா பிணைத் தொகையை வழங்குமாறும்— தனது கடவுச்சீட்டை தடா நீதிமன்றில் ஒப்படைக்க வேண்டும் என்றும் சஞ்சேய் தத்துக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர். [ஐ-3]

## புலிகள் நடமாட்டம் தமிழகத்தில் அதிகரிப்பு!

### உள்துறை செயலர் கவலை

தமிழ்நாட்டில் அதிகரித்து வரும் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் தமக்குக் கவலையளிக்கிறது என்று மத்திய உள்துறை அமைச்சின் செயலாளர் கே. பத்மநாதஐயா கூறியிருக்கிறார்.

தொலைக்காட்சி செய்திப் பிரிவுக்கு அவர்நேற்று அளித்த பேட்டியில்—

விடுதலைப் புலிகளின் நடமாட்டம் காலப்போக்கில் பாரிய உள்நாட்டுப் பாதுகாப்புப் பிரச்சினையாக மாறிவிடக் கூடாது என்று கூறினார்.

விடுதலைப் புலிகளின் நடமாட்டங்களுக்கும், அந்த அமைப்பின் ஆதரவாளர்களுக்கும் எதிராக மாநில அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது என்று அவர் சொன்னார்.

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் நடராசா

(ஓய்வுபெற்ற புதைபொருள் ஆராய்ச்சித் திணைக்களம்)

திருநெல்வேலி கிழக்கு அரசடி வீதியைச் சேர்ந்த ஆறுமுகம் நடராசா 16-10-95 அன்று காலமானார்.

அன்னார் கமலாதேவியின் அன்புக் கணவரும், ஆறுமுகம் - செல்லம்மா ஆகியோரின் அருமை மகனும், முத்துச்சாமி - சின்னம்மா ஆகியோரின் மருமகனும், இரவீந்திரதாஸ் (கனடா), காலஞ்சென்ற ரவீந்திரமலர், மற்றும் இந்திரதாஸ் [பிரான்ஸ்), வசந்தமலர் (ஜேர்மனி], சாந்தமலர் (லண்டன்), பிறேமதாஸ், (பிரான்ஸ்], ஜோகமலர் [ஹொலண்ட்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தனேஸ்வரி, சிவராணி, நவீந்திரராசா, பாலகிருஷ்ணன், சுகந்தினி ஆகியோரின் மாமனாரும், அருளானந்தம் (லண்டன்), தவமணி (ஜெர்மனி), தனபாலசிங்கம் (கனடா), திருநாவுக்கரசு [ஜேர்மனி], அமுதலிங்கம் [கனடா] ஆகியோரின் மைத்துனரும், ஹம்சத்வனி, ஹம்சதவனிதா, பிரசன்னா, சஞ்சியா, ஹம்சத்றூபி, மயூரா, சபீனா, ரதீசா, சஞ்ஜீவன், ரஜீவன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-10 95) பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்;
க. பரமானந்தராசா
[ஆனந்தம் - R. V. G.]

அரசடி வீதி,
திருநெல்வேலி கிழக்கு (39040)

### திருமதி லட்சுமிப்பிள்ளை கெங்காதரம்

திருமதி லட்சுமிப்பிள்ளை 13 - 10 - 95 அன்று அமெரிக்காவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கெங்காதரம் [நாகபூஷணி மில் சண்டிலிப்பாய்] அவர்களின் அன்பு மனைவியும், Dr. ஞானசேகரம் [அமெரிக்கா] உமாதேவி [கனடா], சந்திரசேகரம் [புறாத்], சண்முகநாதன், உருத்திராதேவி [அமெரிக்கா], மதிவதனி (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயாரும் கருணா (அமெரிக்கா), சிவசுந்தரம் (கனடா), ஸ்ரீஉருத்திராதேவி, சசிகலா, சுரேந்திரன் [அமெரிக்கா], கணேசநாதன் (லண்டன்), தயாபரன் - சிவசோதிமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அமெரிக்காவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கெ. சந்திரசேகரம்
[மகன்]

நாகபூஷணி மில்,
சிரணி சந்தி,
சண்டிலிப்பாய். [39039]

### திருமதி ஜெயராமகிருஷ்ணன் தையல்நாயகி

திருமதி ஜெயராமகிருஷ்ணன் தையல்நாயகி நேற்று (16-10-95) காலமானார்.

இவர் கடலையாண்டி ஆச்சாரி - பார்வதி ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஜெயராமகிருஷ்ணனின் அன்பு மனைவியும், பாலமுரளி, தரன், முகுந்தன், பிரியதர்ஷினி, ஜெயராஜ் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

இவரின் ஈமக்கிரியைகள் இன்று (17 - 10 - 1995) பிற்பகல் 3 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. ஜெகதீஸ்வரன்
(சகோதரன்)

304, கஸ்தூரியார் வீதி,
கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம். [39041]

## வீரச்சாவு

### கோபாலபிள்ளை சுசீலகுமார்

(பவன்)

(லெப். அன்பழகன்)

வேலணை 1 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 15/8, தேவாலய வீதி ஓட்டுமடத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட நாகமணி கோபாலபிள்ளை இராஜலக்ஷ்மி தம்பதியரின் அன்பு மகன் பவன் என்று அழைக்கபபடும் சுசீலகுமார் (லெப் அன்பழகன்) [வேலணை சரஸ்வதி வித்தியாலய மாணவன்] 03 - 10 - 1995 அன்று வீரச்சாவடைந்துவிட்டார்.

அன்னார் சுதேஸ்குமார் [சுவிஸ்], சுபேஸ்குமார், சுயமதி (பல்கலைக் கழக கலைப்பீட மூன்றாம் வருட மாணவி], சுரேஸ்குமார் [யாழ் மத்திய கல்லூரி உயர்தர மாணவன்] ஆகியோரின் அன்புச் சகோதரனும், யசோதாவின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிநிகழ்வுகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
— குடும்பத்தினர்

[39043]

### நவீன---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஈ. பி.டி.பி. குழுவினர் ஜனாதிபதி சந்திரிகாவை அலரி மாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

அப்போது அவர்கள் விடுத்த கோரிக்கையை ஏற்றே ஜனாதிபதி இந்த ஆயுதங்களைப் பெற தமக்கு அனுமதி அளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தம்மையும் தமது கட்சி உறுப்பினர்களையும் பாதுகாக்கவே ஆயுதங்களைப் பெற தாம் அனுமதி கோரியதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-3)

### குடாரப்புவில்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பகல் 11.30 மணிமுதல் 12.00 மணி வரை புக்காரா விமானம் ஒன்று வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு கரையோரப் பகுதிகளை நீண்ட நேரமாக சுற்றி வட்டமிட்டுச் சென்றது.

மீண்டும் பிற்பகல் 2 மணியளவிலும் இப்பகுதிகளை புக்காரா விமானம் நோட்டமிட்டது. [ஐ-173]

### வலிகாமம் ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பனிப்புலம், பிரான்பற்று, சுழிபுரம், பாண்டவெட்டை, கல்லைவேம்படி, வறுத்தோலை, பறாளை, நெல்லியான், பண்ணாகம், தொல்புரம், வழக்கம்பரை, சித்தன்கேணி, சங்கானை, மாவடி, வட்டுக்கோட்டை, இறாத்தலடி, கலைநகர், பிலவத்தை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்களே யோட்டது போட்டபடி இருக்க வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்தனர்.

நேற்று முன்தினம் வலிமேற்கு பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையை அடுத்து அப்பகுதிகளில் இருந்து குடும்பம் குடும்பமாக வெளியேறி அயற் கிராமங்களில் தங்கியிருந்த மக்கள் பலர் நேற்றுக்காலை அப்பகுதிகளில்நிலவிய சுமுக நிலைமையைக் கண்டு தம் இருப்பிடங்களுக்கு திரும்பினர்.

இவ்வாறு காலை தம் இருப்பிடங்களுக்குசென்ற மக்களே, மீண்டும் அங்கு மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலினால் பீதி கொண்டு இருப்பிடங்களை விட்டு வெளியேறினர்.

[உ-3-4-13]

பெற்றோர்களே!

போலியோவிலிருந்து ஐந்து வயதுக்குக் குறைந்த உங்கள் குழந்தைகளை காப்பாற்றுவதற்கு

சொட்டு மருந்து கொடுங்கள்

அதற்கான நாள் நவம்பர் 4

அதனை மனதில் பதியுங்கள்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேற்] லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 17 - 10 - 95 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org